விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 சித்திரை 12 ஞாயிற்றுக்கிழமை (25.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 127

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# பேச்சுக்கு வருமாறு அரசு அழைத்தால் அதனை தமிழ்க் கூட்டமைப்பு ஏற்கும்

## அமைச்சர் அழகப்பெருமவின் உரைக்கு அரியநேத்திரன் எம்.பி. பதில்

(கொழும்பு)

தமிழ் மக்களின் உடனடித் தேவைகளைத் தீர்ப்பது குறித்தும் அரசியல் தீர்வு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக் கொள்ளும் என அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகத்துறை அமைச்சராக ★ ஹெகலிய ரம்புக்வெல! ★

(கொழும்பு)

அரசாங்கப் பாதுகாப்புப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு ஊடக அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விரைவில் ஹெகலியவுக்கு ஊடக அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படும் எனக் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறெனினும் அமைச்சுப் பொறுப்பொன்றை வழங்குவது குறித்து இது வரையில் தமக்கு அறிவிக்கப்படவில்லை என ஹெகலிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை நடத்தி வருகின்ற காரணத்தினால் கண்டி மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு மற்றும் பிரதி அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை.

கடந்த அரசாங்கத்தில் ஹெகலிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சராகக் கடமையாற்றி வந்தமை (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் முடிபு நியாயமானதல்ல–சஜீத்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனங்களை ஒதுக்கும் போது மனோ கணேசனின் கட்சி பிரதிநிதி ஒருவருக்கு ஆசனம் வழங்கப்படுவதில்லை என எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தான் எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் இது குறித்துத் தாம் கவலையடைந்துள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜீத் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மனோ கணே (20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இரணைமடு விமானத்தளம் இந்திய விமானப் படைக்குக் காணிக்கை!

(கிளிநொச்சி)

இலங்கை கடற்பரப்பில் சீனாவில் பிரசன்னம் தொடர்பான சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையில் இந்திய விமானப் படையினருக்கான தளமொன்றை வன்னியில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கச்சதீவு-இந்தியா தொடர்பான பிரச்சினையில் சீனாவின் தலையீடு தொடர்பாக விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் வன்னியில் விடுதலைப்புலிகள் அமைப்பினால் பயன்படுத்தப்பட்டு வந்த இரணைமடு விமானத் தளத்தை இந்திய விமானப் படையினர் பயன்படுத்துவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைவாக இந்திய உயரதிகாரிகள் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்குமிடையில் சென்று வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்துத் தொலைத்தொடர்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் இரணைமடு உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அண்மையில் ஏ-9 வீதியின் கிழக்குப் பகுதியில் சில கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு மூன்றில் இரண்டு பலம் கிடைக்கும்



### சிறிபால டி சில்வா நம்பிக்கை

(கொழும்பு)

தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 144 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ள போதிலும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையாக மாற்றமடையும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் (20 ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு பெறும் நூறு புலிப் போராளிகள் வடக்கு மாகாண போ.வ.சேவையில் இணைவர்

### ஆளுநர் சந்திரசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்ற விடுதலைப்புலிகளின் நூறு முன்னாள் போராளிகள் வடக்கு மாகாணத்துக்கான போக்குவரத்துச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்தச் செய்தியை பி.டி.ஐ.இணையத்தளம் வெளியிட்டுள்ளது. புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்ற விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தகுதி அடிப்படையில் இதற்காகத் தெரிவு செய்யப்படுவர் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்படுகின்ற 100 பேருக்கு பேருந்து ஓட்டுதல் மற்றும் நடத்துநர் பயிற்சிகள் வழங்கப்பட்டு வடமாகாணப் போக்குவரத்துச்சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ந–5)

## திஸ்ஸ விதாரணவுக்கு அதே அமைச்சு

(கொழும்பு)

லங்கா சமசமாஜக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண எதிர்வரும் 30 ஆம் திகதி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சராகப் பதவியேற்கவுள்ளார்.

தன்னால் ஏற்பட்ட தவறு காரணமாக நேற்று நடைபெற்ற பதவியேற்பு வைபத்திற்கு அழைக்க முடியாது போனதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க திஸ்ஸ விதாரணவிடம் தெரிவித்துள்ளார்.

இதனால் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவிற்கு அழைப்பதாகவும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேசனுக்கு ரணில் செய்தது துரோகம்

### பிரபா கணேசன் காட்டம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கை ஒரு பச்சைத் தமிழனுக்கு செய்யப்பட்ட பச்சைத் துரோகமாகும். நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டிய தலைவர் மனோ கணேசனின் தமிழ்க் குரல் ஒலிக்கவிடாமல் செய்துவிட்ட ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு பதில் கூறியே ஆக வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

தமது கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரபா கணேசன், எமது கட்சி ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணியின் ஸ்தாபக கட்சியாகும்.

நான்கு ஸ்தா (20 ஆம் பக்கம் பார்க்க)


தரமான கணணிகளை வாங்க வேண்டுமா?

15 பக்கம் பார்க்கவும்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யுத்தத்தால் ஏற்பட்ட அழிவுகளை இரண்டு வருடங்களில் ஈடுசெய்வோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி



(கொழும்பு)

ஊடகங்கள் மக்களுக்கு வழி காட்டியாகவும் உண்மையயாக வும் இருக்க வேண்டும். அதுதான் சிறந்த ஊடக சுதந்திரமாக விளங்க முடியுமென பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்தார்.

புதிய அமைச்சைப் பொறுப் பேற்றுக் கொண்டதன் பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்திய முதலாவது ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத் துத் தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த நாடாளு மன்றத் தேர்தல் வடக்கில் நியாய மான முறையிலும், அமைதியான முறையிலும் நடைபெற்றிருந்தது டன் தேர்தல் மோசடிகள் குறித்து எவ்விதமான தகவல்களும் கிடைக் கப்பெறவில்லை.

ஆறு ஆசனங்களை எதிர்பார்த் திருந்த போதிலும் எமக்கு மூன்று ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. இருந்த போதிலும் மக்கள் வழங்கிய முடிபை நாம் மனப்பூர்வமாக ஏற் றுக்கொள்கின்றோம்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 19774 வாக்குகள் நிரா கரிக்கப்பட்ட வாக்குகளாகவும் அவற் றில் 75 வீதமான வாக்குகள் எமக்கு வழங்கப்பட்ட வாக்குகளாகும். எனி னும் வாக்களிக்கும் முறையில் விட்ட தவறுகள் காரணமாகவே அந்த வாக்குகள் நிராகரிக்கப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களைப் போன்று சில ஊடகங்கள் நிகழ்காலத்திலும் செயற்பட்டு வருகின்றமையானது கண்டிக்கத்தக்கது. முக்கியமாக யாழ். மேயர் நையப்புடைக்கப்பட் டமை, சாவகச்சேரி மாணவன் கபில் நாத்தின் படுகொலைக்கும் எமது கட்சிக்கும் தொடர்புகள் இருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி கள் முற்றிலும் உண்மைக்கு புறம் பானவை.

இவ்வாறான சம்பவங்கள் திட்ட மிட்ட சதி என்பதுடன் காழ்ப்புணர்ச் சியும் ஒரு காரணமாக உள்ளது.

எனவே ஊடகங்கள் மக்களுக்கு வழிகாட்டியாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டுமென்று அமைச் சர் கேட்டுக்கொண்டார்.

யாழ். குடாநாட்டில் தற்போது நடைபெற்று வருகின்ற கடத்தல், கொலை, கொள்ளை போன்ற தீய சம்பவங்கள் இனிமேலும் இடம் பெறாத வண்ணம் மக்கள் விழிப் பாக இருப்பதுடன் உரிய வழிமுறை களில் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற அழிவு யுத்தத்தினால் எமது மக்கள் இழந்த சொத்துக்களை இரண்டு வருடங்களில் மீளப் பெற்றுக்கொள் வதற்கு சகலவழிகளிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ் பேசும் மக்களின் அரசி யலுரிமைப் பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்குச் சாத்தியமான விதத்தில் ஒரு தொடக்க மாகத்தான் இருக்கும். இதற்கான இறுதித் தீர்வு இணக்கப்பாட்டின் மூலமும் அனைத்துத் தரப்பினர தும் ஒத்துழைப்பின் மூலமுமே எட் டப்பட வேண்டும்.

புதிய அமைச்சின் ஊடாக நாட ளாவிய ரீதியிலும் யாழ்ப்பாண மக் களினதும் வளமானவாழ்விற்கு கூடியளவில் பணி செய்யவுள்ள அதேவேளை இந்தியா மற்றும் தமிழ கத்தின் உதவிகளை யும் நாட உத்தேசித் துள்ளோம்.

யாழ். வன்னி மாவட்டங்களைச் சேர்ந்தவேலை யற்றப்பட்டதாரிகளுக் கானவேலைவாய்ப் புக்கள் முன்பள்ளி ஆசிரியைகள், தொண்டர்ஆசிரி யர் ஆகியோருக்கு நிரந்தர நியமனம், உள்ளூர் கைத் தொழில் உற்பத்தி யாளர்களை ஊக் குவித்தல் போன்ற விடயங்கள் குறித்து கவனம்செலுத்த வுள்ளோம்.

முதற்கட்டமாக நாடளாவியரீதி யில் 5000 பட்ட தாரிகளை உள் வாங்கும் வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்படும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புட னும் சில விடயங் கள்தொடரில் கலந் துரையாடி மக்களின் நலன்சார்ந்த நடைமுறைச் சாத்தி யமான இணக் கப்பாடுகள் எட்டப்பட் டால் அந்த விடயங்களை முன்னெ டுப்பதற்கும் நாம் தயாராக உள் ளோம் என்றும் எமது மக்களின் நலன்களை முன்னிறுத்திய நட வடிக்கைகளே எமது குறிக்கோ ளாகும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித் தார். (ந-5)


### சேவை முகவர்

**விற்பனைக்கு**

கந்தர்மடம், கோண்டாவில், உரும்பிராய் பலாலி வீதி, 150 மீற்றர் தூரம் 9 பரப்பு பொற்பதி வீதி, இரு பாலை கிழக்கு ஆகிய இடங்களில், காணிகள், வீடு விற்பனைக்குண்டு. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ள லாம்.

தொடர்பு : சுந்தரம்
222 9177, 071 462 4830 (1282)

### வீடு வாடகைக்கு

கச்சேரி, நல்லூர் வீதிக்கு அருகாமையில் 2500சதுர அடி பரப்புடைய வீடு வாட கைக்கு உண்டு. அரச, தனி யார் நிறுவனங்களுக்கு உகந்தது.

Contact:0778948410 (1255)

### மணப்பெண் தேவை

யாழ். இந்து உயர்குலம் U.K சிற்றிசன் 1973ஆம் ஆண்டு பிறந் தவரும் மகம் நட்சத்திரம் உள்ளவ ரும் செவ்வாய்க் குற்றம் எதுவும் இல்லை. கம்பனி ஒன்றில் வேலை செய்கிறார். மிக விரைவில் இலங் கை வரவுள்ளார். படித்த ஆங்கில அறிவுள்ள தகுந்த மணப் பெண் ணை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு: 00447535384166 (U.K) (அ-159)

### வீடு வாடகைக்கு

பலாலி றோட், 2ஆம் ஒழுங் கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிக ளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 7684 (அ-148)

### மணமகள் தேவை

நல்ல கௌரவமான யாழ். இந்து வேளாள குடும்ப, நல்லொழுக்கம் நற்பண்புடைய அழகான குணமான 36 வயது 5' 8" உயரமான M.B.B.S டாக்டர் மகனுக்கு பொருத்தமான மணமகளைத் தேடு கின்றோம். விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 0113150303 (1237)

### யாழ் நகரில்
### British College of Higher Studies
ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

**இப் பயிற்ச நெறியில் உள்ளடங்குபவை**

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

**பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்**

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**
**சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்**

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**
No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.
web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499 (அ-136)

### நன்றி நவிலல்



பதுளை மாநகர் அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர் வேலாயுதசுவாமி கோயில் பிர தமகுரு பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா அவர்களின்

பாரியார்

**அமரர் ஸ்ரீமதி பூரணசந்திரிகா சிவானந்தசர்மா**

*2010.04.11* அன்று சிவபதமடைந்த எமது குடும் பத் தலைவி அமரர் ஸ்ரீமதி பூரணசந்திரிகா சிவானந்த சர்மா அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பங்கேற்றவர்களுக்கும், நேரில் மற்றும் தொலைபேசி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், பதுளை வாழ் மக்களுக்கும் ஆலய நிர்வாக சபையினருக்கும், உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள், அயலவர் கள், பதுளை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழக தமிழ் மாணவர்களுக்கும், இறுதிக் கிரியைகளின் போது பல் வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் தசாக சபிண் டிகரண நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைவருக் கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கு.சரவணபவக்குருக்கள்
பவாநி வாசம், காரைக்கால் வீதி,
இணுவில்.
021 222 5781

சா.சிவானந்தசர்மா குடும்பத்தினர்
226/1 A, கெப்பட்டிபொல வீதி ,
பதுளை.
055 2229548, 0777175555

(1263)

### கம்பியூட்டர் மெகா சேல்

ஏப்ரல் 2010 – 24, 25, 26 ஆகிய தினங்களில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

ரூபா 10,000–20,000 வரை கணனிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- அரசாங்க தொழிலாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர் களுக்கு விஷேட கழிவில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: 071- 8570604, 071 3680707 (1240)

### காணி விற்பனைக்கு

இல.43 அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுண் னாகம் 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள பின் வரும் தொலைபேசி இலக்கத் தில் கதைக்கலாம்.

Dr.R.கனகலிங்கம் 0779522105
Mr.சி.தனஞ்சயன் 0714102174
Mrs.ச.ஜெயபாலன் 0771622770 (1212)

### ஸ்ரீராம ஜெயம்

இந்தியாவின் எட்டயபுரத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஜோதிடர் S.சந்திரபோஸ் ஜாதகம், கை ரேகை, எண் கணிதம், திருமணப் பொருத்தம் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும். T.P.:0778752163

414, சன்ஜெயா உணவகம்,
மேல்மாடி அறை இல.02
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1249)

### தேவை

யாழ். நகரிலிருக்கும் இரு ம்பு வியா பார ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள விற்பனையா ளர் தேவை.

யாழ். மாநகர சபைக்குள் உட்பட்டவர் கள் விரும்பத்தக் கது.

தொடர்பு: T.P.:222 6769
H.P.:0779148779 (1234)

## வடமராட்சி கல்வி வலயத்தில்
# இடைநிலைப் பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் பத்து வருடங்களுக்கும் மேலாக ஒரே பாடசாலையில் கடமையாற்றி 53 வயதுக்குட்பட்ட இடைநிலைப்பிரிவில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் எதிர்வரும் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே ஆரம்ப பிரிவுகளில் கடமையாற்றிய 150 ஆசிரியர்களுக்கு பங்குனி மாதம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற தேர்தலினால் இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் க.பொ.த. (உ/த) வரை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவடைந்தவுடன் இவர்களின் இடமாற்றம் உடனடியாக அமுல்படுத்தப்படும் என வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2-19)

## ஞாபகார்த்த விழா

தோழியர் வேதவல்லி கந்தையாவின் 22 ஆவது ஞாபகார்த்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வட்டு மூளாய் றோட், ஐக்கிய நாணய சங்கம் மகளிர் குழு தலைவி திருமதி செல்வலட்சுமி மாணிக்கவாசகர் தலைமை யில் நடைபெறும் இந் நிகழ்வில் ஞாபகார்த்த உரைகளும் இடம் பெறவுள்ளன. (6)

## பௌர்ணமி தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் பௌர்ணமி தினமான எதிர்வரும் புதன்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் பெற்று தொடர்ந்து ஓங்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்பு சொற்பொழிவு என்பன நடைபெறவுள்ளது. (2)

# க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

**யாழ் வல்வை சிவகுரு வித்தியாசாலை**

செ. துவாரகா - 3ஏ, 3சி, 3 எஸ், பி. ஜோபிதா - 2ஏ, 2பி, 3சி, 2 எஸ், ம. மாதுளாணி - 2ஏ,பி, 3சி, 3எஸ், ப.பகீரதி - 2ஏ,3சி, 3எஸ், ஜெ. சுகன்யா - ஏ, 2பி, 2சி,3எஸ், த. ரியந்திரனி - ஏ,பி, 2சி, 4எஸ், க. பிரபாகரன் - ஏ, 4சி, 3எஸ், க. விபூசுதன் - ஏ,4சி,3எஸ், சி. கமலினி -ஏ, பி, 5சி, 2எஸ்.

**யா/ ஹாட்லிக் கல்லூரி**

**தமிழ் மொழி மூலம்**

க. பிரசாந் - 9ஏ, சி. சக்திதாசன் - 9ஏ, சு. ஜெயசீலன் - 8ஏ,பி, கு. ஐங்கரன் - 8ஏ,பி, பா. சூர்யா - 8ஏ,பி, தி. அஜந்தன் - 7ஏ, 2பி, சு. கௌசிகன் - 7ஏ, 2பி, ச. சுலக்ஷன் - 7ஏ,பி,சி, ச. நிஷாந்தன் - 6ஏ, 3பி, ப. பானுகோபன் - 6ஏ,2பி,எஸ், ச. பிரசாந் - 5ஏ,4பி, சா. அனுதர்சன் - 5ஏ,3பி, சி, ம. கோணேஸ்வரன் - 5ஏ, 3பி, சி, பா. டினேஷ் - 5ஏ, 2பி, 2சி, த. பிரணவன் - 5ஏ,2பி, 2சி, ந. ராஜ்குமார் - 5ஏ, 2பி, 2சி, வ. பிரதிகரன் - 5ஏ, 2பி, 2சி.

**ஆங்கில மொழி மூலம்**

பா. கபிலன் - 9ஏ, பு. சுதர்சன் - 7ஏ, 2சி, தி. துவாரகன் - 6ஏ, 3பி, ப. கௌசிகேசன் - 6ஏ, 2பி, சி, வே. கீர்த்தனன் -6ஏ, 2பி,சி, க. துஷாந்தன் - 6ஏ, பி, 2சி, பா. திரிராம் - 6ஏ, பி, 2சி, சு. திரிஷாந்த் - 5ஏ, 2பி, 2சி, ச. பரதன் - 5ஏ, 2பி, 2சி. (6-19)

## இராசி பலன்

*25-04-2010*
*(சித்திரை 12, ஞாயிற்றுக்கிழமை)*
*துவாதசி முன்னிரவு 11.49 மணிவரை*
*பூரம் முற்பகல் 8.54 மணிவரை*
*இராகுகாலம் 4.30-6.00 மணிவரை*
*சுபநேரம் 9.00-10.30 மணிவரை*
*இணுவில் கிழக்கு அருணகிரி நாத சுப்பிரமணியர் கொடியேற்றம், திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் கொடியேற்றம், சித்தாமிர்தம்.*

| | |
|---|---|
| மேடம் | சத்துருஜெயம், எடுத்த காரியம் கைகூடும், திடீர் பயணம், சுகவாழ்வு. |
| இடபம் | காரிய இடையூறு, குடும்பக் கவலை, போசன சுகக்குறைவு, தனவிரயம். |
| மிதுனம் | மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, தொழில் சிந்தை, கல்வியில் ஆர்வம். |
| கடகம் | வாக்குமேன்மை, அந்நியர் சந்திப்பு, காரிய நன்மை, பிரயாண சுகம். |
| சிங்கம் | பித்தரோகம், விவாதம், தனவிரயம், முயற்சி தாமதம். |
| கன்னி | சிந்தனை மிகுதி, நண்பர்கள் உதவி, சயன சுகம், நல்ல முயற்சி. |
| துலாம் | கோபப்படுதல், சுபசெலவு, இடமாற்றம், போசன சுகம். |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம், எடுத்த காரியம் கைகூடும், கீர்த்தி. |
| தனுசு | சுபநிகழ்வு, சுபசெய்தி, விருந்துபசாரம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | ஆன்றோர் சந்திப்பு, அச்சமான நிலை, எதிர்பாராத செலவு, பிரயாணம். |
| கும்பம் | போசன சுகம், ஆரோக்கிய குறைவு, தொழில் நன்மை, வீண்பகை. |
| மீனம் | திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், காரிய நன்ம. |

வளவன்

## வாரம் ஒரு தகவல்
# சங்கீதமும் சாப்பாடும்

“நான் இப்பொழுதெல்லாம் சங்கீதம் கேட்டுக் கொண்டே தான் சேர் சாப்பிடுவேன்”

“அப்படியா?”

“ஆமாம்சேர். சமீபத்தில் ஒரு செய்தி படித்தேன். அதற்குப் பின் தான் இப்படி ஆரம்பித்தேன்”

“என்ன படித்தீங்க”

“சங்கீதம் கேட்டுக் கொண்டே சாப்பிட்டால் ஜீரணக் கோளாறு வருவதில்லையாம்.”

“அது எப்படி”

“ஒரு பல்கலைக்கழகத்தில் (Tufts University) இதைப் பற்றி ஒரு சோதனை பண்ணிப் பார்த்தார்களாம். சில பேரை சத்தமில்லாத சாதாரண சூழ்நிலையிலும் சில பேரை டிஸ்கோபோல வேகமான இசையைக் கேட்டுக் கொண்டும்சிலபேரை புல்லாங்குழல் மாதிரியான மென்மையான இசையைக் கேட்டுகொண்டும் சாப்பிட விட்டார்களாம்.

முதல் இரண்டு வகையினரும் சீக்கிரமாகச் சாப்பிட்டு முடித்து விட்டு மறுபடியும் சாப்பாடு கேட்டார்களாம். மூன்றாவது வகையினர் மெதுவாகச் சாப்பிட்டார்களாம். யாரும் இரண்டாவது தடவை சாப்பாடு கேட்கவில்லையாம். இவர்களுக்கெல்லாம் சாப்பாடு சுவையாக தெரிந்ததாம். வயிறும் நிறைந்ததாம். ஜீரணக் கோளாறும் இல்லையாம்.”

“அப்படியானால் மெல்லிசையைக் கேட்டுக் கொண்டே சாப்பிடலாம் என்கிறீர்களா?”

“ஆமாம். நேற்றுக்கூட எங்கள் வீட்டில் என் மனைவி சாப்பிட உட்கார்ந்ததும் நான் என்ன சொன்னேன் தெரியுமா?”

“என்ன சொன்னீங்க?”

“நீ சாப்பிட்டு முடிக்கிற வரைக்கும் நான் பாட்டுப் பாடினால் என்ன தருவாய் என்று கேட்டேன். பத்து ரூபாய் தருகிறேன் என்று சொன்னா, நான் பாடி முடித்ததும் 100 ரூபாய் கொடுத்தா சேர்.”

“அவ்வளவு நல்லா பாடினீங்களா?”

“அதுதான் கேட்டேன். அவளிடம்...”

“என்ன சொன்னா?”

“நீங்க பாடினத்துக்கு 10 ரூபாய் தான் மீதி 90 ரூபாய் பாட்டை நிறுத்தினதுக்காக என்றாள்.”

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 70 |
| தக்காளி | 50 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 50 |
| பாகற்காய் | 80 | 100 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 90 | 100 | 60 |
| லீக்ஸ் | 120 | 130 | 90 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 150 | 160 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 50 | 30 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |









கொமர்ஷல் வங்கியின் அருணலு சிறுவர் சேமிப்புத் திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான நன்கொடை சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் வங்கியின் சுன்னாகம் கிளையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளியின் அதிபர் கே.காராளசிங்கம் சிறப்புரை நிகழ்த்துவதையும், சுன்னாகம் கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் ஏ.ஆர்.குலேந்திரன், உதவி முகாமையாளர் கே.விவேகானந்தராஜா ஆகியோர் மாணவிகளுக்கு பரிசில் வழங்குவதையும், பரிசில்பெற்ற மாணவர்களுடன் முகாமையாளர், உதவி முகாமையாளர் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

## வருடாந்த கலைவிழா

(காரைநகர்)

காரை கிட்ஸ்பார்க் முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரை கிட்ஸ் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கிட்ஸ் பார்க் தலைவர் க.நேர்த்திரானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக ப.தனபாலன், காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் அ.குமரேசமூர்த்தி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-246)

## உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கூட்டுறவு திறந்த விற்பனை நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கூட்டுறவு திறந்த விற்பனை நிலையம் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச முன்றலில் நடைபெறவுள்ளதுடன் கூட்ட நிகழ்வுகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கியின் சமாசத் தலைவர் ச.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுனர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ், வடமாகாண கைத்தொழில் திணைக்கள பணிப்பாளர் ஆர். விஸ்வலிங்கம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவும் சங்கங்களின் பதிவாளருமான ஆ.சுப்பிர மணிய சர்மா மற்றும் வடமாகாண உள்ளூராட்சி நிவாரண மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு கிராம அபிவிருத்தி கைத்தொழில் சமூக சேவைகள் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி. ரமேஸ் விஜயலட்சுமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (2-6)

## கட்டடத் திறப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் கீழ் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட, இன்று நடைபெறவிருந்த இருமாடிக் கட்டடத் திறப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-7)




## சிவாச்சார்ய கல்வி சான்றிதழ் தேர்வில் சித்தியடைந்தோரின் பெயர் விபரம்

சைவக்குருமணிகள் பயிற்சிக் கல்லூரியினால் கடந்த ஆண்டு நடாத்தப்பட்ட சிவாச்சார்யக் கல்வி சான்றிதழ் கற்கை நெறியை பயின்ற சிவாச்சார்ய மாணவர்களின் பெறுபேறுகள் வெளியாகி உள்ளன. இவர்களில் அதிவிஷேட சித்தியை 8 மாணவர்களும் திறமைச் சித்தியை 6 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

**அதிவிஷேட சித்தி**

சி.ஜதீஸ்வரன் (நாயன்மார்கட்டு), இ. கணேஸ்வரன் (மீசாலை) , தி.ரவீந்திரன் (அச்சுவேலி), ந.வர்ணதேவன் (அச்சுவேலி), மு.தயாபரன் (ஆவரங்கால்), தி.ஜெயரூபன் (அச்சுவேலி) , சி.செந்தூரன் (புத்தூர்), சி.குகராசக் குருக்கள் (கெருடாவில்).

**திறமைச் சித்தி**

தி.மாணிக்கவாசகர்(அச்சுவேலி), நா. சிவதர்சக்குருக்கள் (வண்ணார்பண்ணை), த.விசாகரத்தினக்குருக்கள் (கெருடாவில்), பா. சிவரூபன் (தும்பளை), வை.இராஜேஸ்வரக் குருக்கள் (தும்பளை), இ.கணேசலிங்கம் (சங்கரத்தை) (2)

## மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை - 2010

(யாழ்ப்பாணம்)

மாகாண கல்வித் திணைக்களத்தினால் நிரல் கல்வி அமைச்சின் மனைப்பொருளியல் கல்விப்பணிப்பாளர் அவரது வளவாளர்களைக் கொண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கு மனைப் பொருளியல், செயல்முறை தொழில்நுட்பப் பயிற்சிப் பட்டறை -2010 நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் இப் பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 8 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (6)

## நடமாடும் இலவச சட்ட சேவை

(சில்லாலை)

இதம் உளவள நிறுவனமும் மனித உரிமைகள் நிலையமும் இணைந்து நடத்தும் நடமாடும் இலவச சட்டசேவை எதிர்வரும் 29 ஆம்திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உயரப்புலம் மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சட்டம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இலவச சட்ட ஆலோசனையும், சட்ட உதவியும் வழங்கப்படவுள்ளதாக இதம் நிறுவன இணைப்பாளர் ச.சயந்தன் தெரிவித்துள்ளார். (6-58)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவகத்தினால் தமிழ், சுகாதாரமும் உடற்கல்வியும், சித்திரம், விவசாயம், மனையியல், வர்த்தகம், முறைசாராக் கல்வி, விசேடகல்வி, இரண்டாம் மொழி சிங்களம், தகவல் தொழில்நுட்பம், சங்கீதம், ஆரம்பக்கல்வி, கணிதம், வாழ்க்கைத் தேர்ச்சி ஆகிய பாடங்களுக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பாடசாலைகளில் கடமையாற்றும் தகுதியுள்ள ஆசிரியர்களை எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக் கிடையில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக சமர்ப்பிக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 அல்லது இலங்கை ஆசிரியர் சேவை 2.1ஐச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட பாடத்தை அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடத்தில் 7 வருடத்திற்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும் (கல்வி மாணிப் பட்டதாரிகளுக்கு பட்டப்பின்) கல்வி டிப்ளோமாச் சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரிய பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவுத்திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடத்திற்குக் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வாழ்க்கைத் தேர்ச்சி பாடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும்.விசேட கல்வியைப் பொறுத்தவரை தேசிய கல்வி நிறுவகம் அல்லது பல்கலைக்கழகமொன்றில் விசேட கல்வி தொடர்பான பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் பொது உளச்சார்பு மற்றும் பாடத்துறை சார் வினாப் பத்திரமும் எழுத்துப் பரீட்சையில் பரீட்சிக்கப் படுமெனவும் மேலும் தெரிவித்தார். (6-29)

## தீவகத்தில் வெப்பம் காரணமாக நோய்கள் அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)


அதிகரித்த வெப்பம் காரணமாக தீவகத்தில் வெப்ப நோய்கள் பரவி வருகின்றன.

குறிப்பாக சின்னமுத்து, கூவைக்கட்டு, பற்பேத்தை, கண்ணில் நீர் வடிதல், கண் நோய் போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-72)

## எழுத்தாக்கப் போட்டியில் முதலிடம் பெற்றோருக்கு

(யாழ்ப்பாணம்)

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற எழுத்தாக்கப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்ற மாணவர்கள் மாகாணமட்ட போட்டியில் பங்கு கொள்வதற்காக தங்கள் பெயர் விபரங்களை இன்று ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் பதிவுசெய்து கொள்ளு மாறு மாவட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டி அமைப்புக் குழுவின் செயலாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் அறிவித்துள்ளார். (2-6)



*காரைநகர் எம்.இ.சி.கல்வி நிறுவன பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கடந்த க.பொ.த. சாதாரண பரீட்சையில் உயர் பெறுபேற்றினைப் பெற்ற மாணவன் அ.ஜெனார்தனனிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் பதக்கம் அணிவித்துப் பாராட்டுவதனைப் படத்தில் காணலாம்.*

*(படம்:- காரைநகர் செய்தியாளர்)*

# உணவு நஞ்சானதால் பாதிக்கப்பட்ட 14 பேர் வைத்தியசாலையில் அனுமதி

ஏறாவூர் பகுதியில் உணவு நச்சுத் தன்மையடைந்ததன் காரணமாக ஒரே குடும்பத்தை சேர்ந்த 14 பேர் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஏறாவூர் சதாம்ஹூஸ்சைன் கிராமத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. உணவு நச்சுத் தன்மை காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக மாவட்ட வைத்திய அதிகாரி குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டவர்களில் 5 சிறுவர்கள் அடங்குவதாகவும் அவர்களின் நிலைகுறித்து கவலையடைய தேவையில்லை எனவும் அவர் கூறினார்.

உணவு நச்சுத்தன்மையினால் பாதிக்கப்பட்டவர்கள் வயிற்றோட்டம், வாந்தி, தலைச்சுற்று தலைவலி போன்ற உபாதைகளுக்கு உள்ளாகியிருப்பதால் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (6)


உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மலேசியா

MALAYSIA

உற்பத்தி தொழிலாளர்கள்

Electronic Factory Workers

ஆசியாவில் உள்ள அழகுமிக்க நாடாகிய மலேசியாவிற்கு உற்பத்தி தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். இது சிங்கபூரை தலைமயமாகக் கொண்ட பிரபல்யமான கம்பனி.

வெற்றிடங்கள் 50

மாத சம்பளம் RM650.00 (1RM@ ரூபா.34/-)

மேலதிக வேலை நேரம் (Over Time) கொடுப்பனவும் உண்டு

| | | | |
|---|---|---|---|
| 8 Hours Duty | = RM 546.00 | **Over Time Rates** | |
| Special Allowance for Food | = RM 52.00 | Normal working days - per hour | = RM 4.68 |
| Attendance Allowance | = RM 52.00 | Sunday - per hour | = RM 6.25 |
| **Monthly Salary** | = RM 650.00 | Special holidays - per hour | = RM 9.37 |

| | |
|---|---|
| ஒரு நாளைக்கு சராசரியாக 3 மணித்தியாலங்கள் ஓவர்ரைம் செய்தால் RM 4.68 x 3 | = RM 14.04 |
| 26 நாட்களுக்கு 3 மணித்தியாலம் ஓவர்ரைம் செய்தால் RM 14.04 X 26 | = RM 365.04 |

| | |
|---|---|
| Basic salary | = RM 650.00 + |
| Over Time | = RM 365.00 |
| Total Monthly Income | = RM 1015.00 |

மாத மொத்த வருமானம் இலங்கை ரூபா

RM 1015 × ரூபா.34.00 = ரூபா.34,510/-

மலேசியா அரசாங்க வரி (Government Levy) அறவிடப்படமாட்டாது.

வயது: 21+ தொடக்கம் 32 வரை.

ஒப்பந்தக்காலம் 3 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது)

தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் எமது MR.R.Guna (குணா) என்பவருடன் தொடர்பு கொண்டு எமது கம்பனி முகவருடன் ஒரு சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு கொழும்பு வரவும்.

மொபைல்: 077-826 3228 (யாழ்ப்பாணம்).

நேர்முகப் பரீட்சை மே மாதம் 3, 4, 5ம் திகதிகளில் நடைபெறும்.

Interviews on 3rd, 4th & 5th May, 2010

நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்கள் உடனடியாக கொழும்பில் மெடிகல் ரெஸ்ட் (Medical Test) செய்ய வேண்டும். தொழில் விசா எடுப்பதற்கு மெடிகல் ரெஸ்ட் ரிப்போட் அவசியம். வரும்பொழுது தங்களது பாஸ்போட் மற்றும் 10 பாஸ்போட் அளவு கலர் போட்டோ (White Background) உடன் வரவும்.

**Terms & Conditions**

Free Accommodation, Food allowance is included in the salary & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three (3) years (Renewable). Other terms & conditions will be as per Malaysian Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், மலேசியா மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

TRANSSTAR

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011 - 2 386 824 Mobile: 077-826 3228

S.L.Bureau Labour Licence : 1311.

S.L.Bureau Approval AL/1311/Advt/03/10.

(Near Hulftsdorp Courts - Colombo)

(ஹல்ஸ்டொர்ப் நீதிமன்றங்களுக்கு அருகாமையில்)

(டாம் வீதியில் உள்ள ஹல்ஸ்டொர்ப் தபால் நிலையத்திற்கு அடுத்த கட்டிடம்)


## அறிவித்தல்

### தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் கிளிநொச்சி

எமது கழகத்தில் உறுப்புரிமை பெற்று இதுவரையில் பேருந்துகளை கொள்வனவு செய்யாத/ ***பழைய உரிமையாளர்கள்*** வரும் ***27.06.2010*** ஆம் நாளிற்கு முன்னர் பேருந்தினை கொள்வனவு செய்து எமது பணிமனையில் ஆவணங்களை ஒப்படைக்குமாறும் தவறுமிடத்து அதற்கான காரணத்தினை எழுத்து மூலமாக அறியத்தரவும். மேற்படி திகதிக்கு முன் பேருந்து கொள்வனவு செய்யாத பழைய உரிமையாளர்களிற்கான வாய்ப்பு ***28.06.2010***ஆம் நாள் நீங்கும் என்பதனை அறியத்தருகின்றேன்.

தகவல்:-
த.ஜெகதீஸ்வரன்
தலைவர்

(1252)

# ஐ.தே.கவிலிருந்து வெளியேறியோரில் ஏழுபேருக்கே இம்முறை அமைச்சுப்பதவி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலகி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்களில் ஏழு பேருக்கு மட்டுமே இம்முறை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன.

அதேவேளை 39 பிரதியமைச்சர்கள் கொண்ட அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த ஐவருக்கே பிரதியமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் புதிதாக போட்டியிட்டவர்களுக்கு அமைச்சு பதவிகளோ பிரதியமைச்சு பதவிகளோ வழங்கப்படவில்லை. அமைச்சர்களாக பி.தயாரத்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், காமினி லொக் குகே, பந்துல குணவர்தன, மஹிந்த சமரசிங்க, ராஜித சேனாரத்ன மற்றும் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகிய ஏழு பேருமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதியமைச்சர்களான சுசந்த புஞ்சிநிலமே, லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன , இந்திக்க பண்டாரநாயக்க, சரத் குணரத்ன மற்றும் நந்தமித்திர ஏக்க நாயக்க ஆகியோரே பிரதியமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஐக்கிய தேசியக்கட்சியை சேர்ந்த 40 க்கு மேற்பட்டோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து கொண்டதுடன் அதில் பலர் கடந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. (6)

# கடந்த அமைச்சரவையில் அங்கம் வகித்த பலருக்கு இம்முறை இடமளிக்கப்படவில்லை

(கொழும்பு)

கடந்த அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்கள் பலர் புதிய அரசின் அமைச்சரவையில் உள்ளடக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் ஹெகலிய ரம்புக்வெல, திஸ்ஸவிதாரண, சரத் அமுனுகம, அச்சல ஜெயகொட ஆகியோருக்கு புதிய அமைச்சரவையில் இடமளிக்கப்படவில்லை.

மற்றும் கடந்த அமைச்சரவையில் அமைச்சரவையற்ற முறையில் கடமையாற்றிய நவீன் திஸாநாயக்கா, மஹிந்தானந்த அழுத்கமகே ஆகியோரும் அமைச்சரவையில் இடமளிக்கப்படவில்லை.

அதேவேளை கடந்த அமைச்சரவையில் இடம்பெறாத பசில் ராஜபக்ஷ, விமல் வீரவன்ச ஆகியோரும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த வீரகுமார திஸாநாயக்க, நிருபமா ராஜபக்ஷ லலித்திஸநாயக்க, நந்தி மித்திரா, ஏக்கநாயக்க ஆகியோருக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளில் உறுப்பினர்களாகவிருந்த ரெஜினோல்ட்கூரே, எம்.எல்.ஏ. ஹிஸ்புல்லா, விஜித முனி சொய்ஸா ஆகியோருக்கும் பிரதி அமைச் சர் பதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9)

# கிளிநொச்சி, யாழ்ப்பாணத்திற்கு லக்சபானவிலிருந்து நீர்மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள்

## விரைவில் விஸ்தரிக்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கான லச்சபானவிலிருந்து நீர்மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளை விஸ்தரிக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான கொங்கிறீட் தூண்கள், வயர் இணைப்புக்கள் வவுனியா விலிருந்து கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு பகுதியூடாக ஏ-9 வீதியை அண்மித்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த யுத்தத்திற்கு முன்பு லக்சபான நீர்மின்சாரம் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் தரைவழியாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது.


தற்போது கிளிநொச்சி நகரப் பகுதிக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஜெனறேற்றார்கள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதே போல் யாழ் மாவட்டத்திற்கான மின்சாரம் சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

மின் கம்பங்கள் நாட்டப்பட்டு மின்இணைப்பு வேலைகள் பூர்த்தியானதும் லக்சபான நீர்மின்சார வசதி இவ்விரு மாவட்டத்திற்கும் கிடைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (2-6)

# பார்வதியம்மா தமிழகத்திற்கு வந்தது புலி ஆதரவாளர்களை உசுப்பேற்ற அல்ல



வேலுப்பிள்ளை, பார்வதி, பிரபாகரன் ,மதிவதனி



அம்புலன்ஸில் வரும் பார்வதியை நலன் விசாரிக்கும் சிவாஜிலிங்கம்

கடந்த பதினாறாம் திகதி இரவில் எத்தனையோ பேரைச் சுமந்து வந்த மலேசியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் புலித் தலைவர் பிரபாகரனின் தாய் பார்வதியும் இருந்தார். உடன் வந்தவர்களுக்கு அவர் வயதான மூதாட்டி அவ்வளவுதான். ஆனால், சென்னை விமான நிலையம் அவரை வேறு மாதிரியாகப் பார்த்தது. நீங்க இங்கே இறங்குவதற்கு அனுமதி இல்லை. எனவே, வந்த விமானத்திலேயே மலேசியா போகலாம் என்றார்கள் அதிகாரிகள். பார்வதிக்குப் பக்கத்தில் துணையாக இருந்த பெண்ணுக்கு தலையை ஆட்டுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ஆனால், அந்தத் தாய்க்கு அதுவும் தெரியவில்லை. ஏதோ நடக்கிறது என்று தெரிகிறது. ஆனால் என்னவென்று புரியவில்லை. லேசாக இமைகள் அசைகின்றன. ஆனால், உள்ளுணர்வுக்கு அதை முழுமையாக யோசிக்கும் சக்தி இல்லை. அவர் இங்கு வந்தது சொந்தங் களைச் சந்திக்கவோ , இங்குள்ள புலி ஆதரவாளர்களை உசுப்பேற்றவோ, ராஜ பக்ஷ போர்க் குற்றவாளி என்று பிரசாரம் செய்யவோ அல்ல. தன்னுடைய நோவுக் கும் உடல் நலிவுக்கும் மருந்திட்டுக் கொள்வதற்காக! தவித்த வாய்க்குத் தண்ணீர் மறுப்பது போல் தான் சிகிச்சை அவருக்கு இங்கே மறுக்கப்பட்டு இருக்கிறது. திருக்குறளும் குறிஞ்சிப்பாட்டும் நாலடியாரும் திரிகடுகமும் விருந்தோம்பலை எப்படி எல்லாம் வியந்தோதியிருக்கிறது என்று மாநாடு கூட்டி நம்முடைய முதுகை நாமே தட்டிக்கொள்ளக்காத்திருக்கும் நேரத்தில் தான் இப்படி ஒருசம்பவம் தமிழகத்தில் நடந்திருக்கிறது.

அப்பா வேலுப்பிள்ளை வல்வெட்டித் துறைக்காரர். அம்மா பார்வதி பருத்தித் துறையைச் சேர்ந்தவர். வேலுப்பிள்ளை அரசு அதிகாரியாக இருந்ததால் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊர் மாற்றிக்கொண்டே இருப்பார்கள். பிரபாகரன் ஆயுதம் தூக்கி தலைமறைவான காலத்தில் இந்தக் குடும்பத்துக்கு வீடு கிடைக்காமல் கிடைத்தாலும் அங்கு நிரந்தரமாகத் தங்க முடியாமல் அலைந்து வந்தார்கள்.

ஒரு கட்டத்தில் இந்தியா வந்து திருச்சியில் தங்கினார்கள். அங்கே போர் மேகம் சற்று விலகிய சமயம் ஈழத்துக்குப் போனார்கள். இறுதிப் போர் முற்றுகைக்குப் பிறகு... எல்லாம் முடிந்த பிறகு... முள்வேலி முகாமில் இராணுவப் பாதுகாப்புக்குப் போனவர்கள்... அதை அடுத்து இலங்கை இராணுவத்தின் கடுமையான கண் காணிப்புப்பிடிக்குள் இருந்தார்கள்.

வேலுப்பிள்ளையின் மறைவைத் தொடர்ந்து அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் முயற்சியால் மலேசியாவுக்கு அழைத்துச் செல்ப் பட்டார். பார்வதி அம்மாள் அங்கு அவருக்கு குறுகிய காலமே விசா தரப்பட்டு இருந்தது. எனவே பிரபாகரனின் அக்கா வினோதினி தான். இருக்கும் கனடாவுக்கே தாயாரை அழைத்துச் செல்ல விரும்பினார். அங்கு மருத்துவச் செலவு அரசாங்கத்தின் வசமாக இருப்பதால் ரொம்பவே யோசித்துத் தான் விசா கொடுப்பார்கள் என்று தெரியவர... மலேசியாவில் இருந்து தமிழகம் அழைத்து வந்து பார்வதி அம்மாளுக்கான சிகிச்சையை முடித்து விட்டு அதன்பிறகு பாதுகாப்பில் வைத்திருப்பது என்று முடி வெடுக்க நினைத்தார் கள்

## இலங்கை அரசு செய்யாத தவறை தமிழக அரசு செய்துள்ளது

பழநெடுமாறன் இதற்கான முயற்சிகளைச் செய்தார். பிரபாகரனின் தாய் நெடுமாறன் வீட்டில் தங்கப்போவதாகத் தான் முகவரியும் தரப்பட்டது.

பார்வதி அம்மாள் புலிகள் அமைப்பின் உறுப்பினர் அல்ல. பிரபாகரனது அண்ணன் மனோகரன் தனது தம்பிக்கு இயக்கம் தொடர்பாக ஒரு கடிதம் அனுப்பிவைத்த போது வேலுப்பிள்ளை பார்வதியின் முகவரி அதில் இருந்து குடும்பம் சம்பந்தப்பட்டது. அவன் இயக்கத்தை நடத்துபவன் சொந்த பந்தத்தை முன்னிட்டு இப்படி உறவு கொண்டாடுவது தவறு என்று சொல்லி அந்தக் கடிதத்தைப் பிரிக்காமலே திருப்பி அனுப்பிவைத்தார்கள் அந்தத் தம்பதியினர்.

ஆனால், இன்று அவரை இயக்கத்தைக் காரணமாகக் காட்டி சிகிச்சைக்கு மறுத்திருப்பது ஆச்சர்யமானது.

கடந்த 10 ஆண்டுகளாகவே பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர் பார்வதி அம்மாள். சர்க்கரை வியாதியும் இருப்பதால் உடல் நிலை மேலும் பாதிக்கப்பட்டது. கிட்னி பாதிப்புக்கும் ஆளானவர் .அண்மையில் தன் கணவர் வேலுப்பிள்ளை மறைந்த பிறகு திடீர் திடீரென்று ஐயா ஐயா என்று அவர் நினைப்பில் அழ ஆரம்பித்தால் வெகு நேரம் வரை விசும்பல் தொடர்ந்து கொண்டே இருக்குமாம். பார்வதி அம்மாள் தானாக இயல்பு நிலைக்குத் திரும்பும் வரை நிதானப்படுத்த முடியாது.

அதாவது உடல் இயக்கத்தின் மிக முக்கியமான சிந்தனை, பேச்சு ,அசைவுகள் நடை ஆகிய நான்கும் பாதிக்கப்பட்டுதான் இருந்தார்.

ஏப்ரல் 16ஆம் திகதி காலைதான் இந்தியா செல்வதற்கான அனுமதி அவருக்குக் கிடைத்ததாம். அன்று இரவு விமானத்திலேயே இடம்பிடித்தார்கள். அவருடன் உதவிக்காக விஜயலட்சுமி என்ற நர்ஸ் வந்திருந்தார்.

இந்தத் தகவலை வைகோவிடம் மட்டும் சொல்லியிருக்கிறார் நெடுமாறன். அவர்கள் இருவர் மட்டும்தான் விமான நிலையத்துக்குச் சென்றிருக்கிறார்கள். ஆனால், அங்கு தமிழக பொலிஸ் படை பலமாகக் காத்திருந்தது.

இருவரையும் உள்ளேயே செல்லவிடாமல் தடுத்துவிட்டது. அந்தப் பெரும் போராட்டம் முடி வதற் குள் பிரபாகரனின் தாயார் மலேசியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டு விட்டார். இதுபற்றிவைகோ தமிழனைத் தலை நிமிர வைத்த பிரபாகரனை பெற்றெடுத்த தாயைத் திருப்பி அனுப்பியதன் மூலம் தீராத பழியை தமிழ்நாடு அடைந்து விட்டது. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் இந்தப் பாவம் நம்மை விட்டுப் போகாது. அவர் ஒன்றும் ஆள்மாறாட்டம் செய்து இரகசிய பெயரில் இந்தியாவுக்கு வரவில்லை. சொந்தப் பெய ரில்தான் வந்தார். அவர் நெடு மாறன் வீட்டில் தங்கப் போவதாகத்தான் முகவரியையும் கொடுத்திருக்கிறார். அவரை மத்திய அரசு தான் திருப்பி அனுப்பியது என்றால், அவர்கள் ஏன் முன்னர் அனுமதி கொடுத்தார்கள். இப்போது மறுத்தார்கள். இரண்டுக்கும் மத்தியில் என்ன நடந்தது.? மத்திய அரசாங்கமே கருணாநிதியின் ஆலோச னைப்படிதான் நடக்கிறது என்று மன்மோகன்சிங் சொல்வது உண்மையானால் இந்த நடவடிக்கையும் கருணாநிதி சொன்னால்தானே நடந்திருக்கும் என்று கொதித்தார்.



மலேசியா ஏர்போர்ட்டில்...

நீங்கள் அனைத்துத் தமிழ் உணர்வாளர்களையும் அழைத்துச் செல்லாமல் இந்த விடயத்தை இரகசியம் காத்தது ஏன் என்று வைகோவிடம் கேட்டபோது,

இப்படியொரு பலமான ஏற்பாட்டை நாங்கள் செய்திருந்தால் கருணாநிதிக்கு வேறு காரணமே தேவைப்பட்டு இருக்காது. புலிகளை வைத்து அரசியல் நடத்த பார்வதியைப் பயன்படுத்து கிறார்கள் என்று சொல்லி அதையே காரணமாகக் காட்டி திருப்பி அனுப்பியிருப்பார்.

அவரை இங்கு மாநாட்டுக்கு அழைத்து வரவில்லை. எங்களுக்கு பார் வதித்தாயைக் குணப்படுத்த வேண் டும் என்பது மட்டும்தான் நோக்கம். தமிழ் உணர்வாளர்கள் வருத்தப்படலாம். ஆனால், அப்படிச் செய்திருந்தால் கரு ணாநிதி தான் இலாபம் அடைந் திருப்பார் என்று பதில் அளிக்கிறார்.

எத்தனையோ கொடூரங்களை நடத்திக் காட்டிய இலங்கை அரசு கூட பார்வதி அம்மாள் விடுதலைப்புலி இயக்கத்தின் உறுப்பினர் அல்ல என்ற விளக்கத்தை ஏற்றுக்கொண்டுதான் மலேசியா செல்ல அனுமதித்தது. மலேசியாவும் தங்க அனுமதித்தது. சென்னை விமான நிலையத்தில் இருந்து திருப்பி அனுப்பிய உடனேயே யோசிக்காமல் மறுபடியும் ஒரு மாத கால அனுமதியை மலேசியா வழங்கியுள்ளது.


மலேசியாவில் இருந்து கிளம்பிச் சென்ற ஒருவர் அடுத்த மூன்று மணி நேரத்தில் மீண்டும் வந்து இறங்க சட்டப்படி அனுமதி கிடையாது. அதைச் சொல்லி மறுத்திருந்தால் பார்வதி மீண்டும் கொழும்புக்குத்தான் போயிருக்க வேண்டும் .ஆனால், அவருக்குத் துணையாகச் சென்றவரோ மலேசிய பிரஜை விசா இல்லாமல் கொழும்பில் இறங்க முடியாது. தனியாக அநாதையாகத்தான் பார்வதி அனுப்பிவைக்கப்பட்டு இருப்பார் என்கிறார் கள் விவரம் அறிந்தவர்கள்.

இரவு பத்தரை மணிக்கு வந்த பார்வதி ஒரு மணி நேரக் காத்திருப்புக்குப் பிறகு மீண்டும் மலேசியாவுக்கு அனுப்பி வைக் கப்பட்டு அங்கு இறக்கிவிடும்போது அதி காலை மூன்றரை. இந்த ஐந்து மணி நேரத்தில் நடுவானத்தில் அவர் நடுங் கிப்போய் விட்டாராம்.

சென்னையில்இறக்காமல்திருப்பிஅனுப்பி விட்டார்கள் என்பதைச் சிரமப்பட்டு அவர் நினைவில்பதியவைத்தபோது... அவரது உதட்டில் இருந்து தம்பி என் கதியைப் பார்த்தாயா? என்று எங்கோ இருக்கும் தன் மகனை நோக்கி வார்த்தைகள் வந்தனவாம். கூடவே கண்களில் இருந்து அலை அலையாக இயலாமை கலந்த நீர்த்துளிகள்!

நன்றி:-ஆனந்தவிகடன்

# கடல் எரிமலைக்குள் அதிசய உயிரினங்கள்!



மனிதன் நிலப்பரப்பில் அநேக விடயங்களை ஆராய்ந்துவிட்டான். பூமியில் 70 சதவீதம் உள்ள கடல் பரப்பில் அவன் அறியாத பல விடயங்கள் மூழ்கிக் கிடக்கின்றன.

உயிரினங்களின் தாய் என கடல் போற்றப்படுகிறது. நிலத்தில் இருப்பது போல எரிமலைகள், மலைகள் போன்றவையும் கடலுக்குள் உண்டு. தற்போது உலகின் மிக ஆழமான கடல் எரிமைலைப் பள்ளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த எரிமலை பள்ளத்துக்குள் ஒரு ரோபோ இறங்கி ஆய்வு செய்ததில் வியப்பூட்டும் சில தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட ரோபோவின் பெயர் "ஒட்டோ சப் 6000" இங்கிலாந்தின் ரோயல் ரிசர்ச் சிப் "அமைப்பு இந்த ரோபோவை வடிமைத்து ஆராய்ச்சி செய்தது. ஆய்வில் வெளிவந்த சில தகவல்கள் வருமாறு...

◆ தென் அமெரிக்கா அருகே உள்ள கரீபியன் கடல் பகுதியில் கேமேன் ட்ரோ என்ற இடத்தில் இந்த எரிமலைப் பள்ளம் உள்ளது. இது 5 கிலோமீற்றர் ஆழம் கொண்டது. 400 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலை உடையது.

◆ இதுவரை 30 ஆண்டுகளுக்கு முன் கண்டறியப்பட்ட பசுபிக் கடலில் உள்ள ஒரு எரிமலைப் பள்ளமே அதிக வெப்பநிலையை (270 டிகிரி) கொண்டதாக இருந்தது.

◆ குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இந்த வெப்ப நிலையிலும் உருகாத வகையில் ரோபோ தயாரிக்கப்பட்டிருந்தது. காப்பர் மற்றும் இரும்பு கொண்டு இது உருவாக்கப்பட்டது.


◆ ஆய்வில் இன்னொரு விடயம் விஞ்ஞானிகளையே ஆச்சரியப்பட வைத்துள்ளது.

அதாவது இந்த அதிக வெப்ப நிலையிலும் கடல் எரிமலை அடியில் உயிரினங்கள் வாழ்கின்றன என்பது தான் அந்த வியப்புக்குரிய விடயம். இவை இதுவரை அறியப்படாத அதிசய உயிரினங்களாகும்.

◆ ஒருவேளை இங்கு உயிரினங்களின் தோற்றத்திற்கான தடயங்கள் கிடைக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதுகுறித்த ஆய்வுகள் தொடரவுள்ளன.

# காயங்கள் காணாமல் போகும்!

காயங்கள் ஏற்படுத்தும் ரணம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாள்பட்ட காயங்களையும் ஆற்றுவதற்கு நவீன "ஸ்பிரே" கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



"சென்ட் ஸ்பிரே" போல இருக்கும் இதில் செயற்கை செல்கள் அடைக்கப்படிருக்கும். காயங்களில் இந்த செல்களை தெளிப்பதன் மூலம் விரைவில் காயங்கள் குணமாகி விடும். "ஹீலிங்" சிகிச்சை முறையில் 5 வார காலத்தில் சரியாகும் காயங்கள் கூட, இந்த முறையில் 2 முதல் 3 வாரங்களில் ஆறிவிடுகிறது.

ஸ்பிரேயில் அடைக்கப்பட்டிருக்கும் செயற்கை செல்கள் காயம்பட்ட இடத்திலுள்ள அதேவகை செல்களாக இருக்கும். இந்த செல்கள் இரு அடுக்குகளாக காயத்தில் படிந்து குணமாக்கும் வேலையை துரிதப் படுத்துகிறது.

ஈராக், ஆப்கானிஸ்தான் போரில் பாதிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ வீரர்களுக்காக இந்த நவீன சிகிச்சையை அங்குள்ளவ்ன பல்கலைக் கழகம் உருவாக்கியிருக்கிறது.

எலிகளில் மட்டும் இந்த சோத னைக்கு வெற்றி கிடைத்துள்ளது.

இந்த "ஸ்பிரே" கருவியை வடிமைத்தவர் பல்கலைக்கழக மாணவர் பைல் பைண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பல்சுவை கதம்பம்

## நோயை காட்டிக் கொடுக்கும் தங்கம்!

தங்கம் விலை உயர்ந்த ஆபரணம். இதில் ஒரு புள்ளி அளவு தங்கத்தை எடுத்து நோயை அறியும் சென்சர் தயாரிக்கப்பட்டுள்ளது.

உடலியக்கத்தில் பெரும் பங்கு வகிக்கும் இரத்தம் உறைவதால் பல்வேறு வியாதிகள் ஏற்படுகின்றன. எனவே இரத்தம் உறைவதை கண்காணித்தால் வியாதிகளை ஆரம்பநிலையிலேயே கண்டுபிடிக்க முடியும்.

இதற்காக தங்கத்தைப் பயன்படுத்தி நானோ சென்சர் உருவாக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. 120 நானோ மீற்றர் அளவு சிறியது இந்த சென்சர். இதன் மையப் பகுதி யில் சிலிகாவும் சுற்றிலும் தங்கமும் இருக்கும்.

இதை உடலுக்குள் செலுத்துவதன் மூலம் இரத்த ஓட்டத்தைக் கண்காணிக்கலாம். உடலில் எங்காவது இரத்தக் கட்டிகள் ஏற்படுவது கண்டறியப்பட்டால் அந்த இடத்தை ஒளிர்வித்து காட்டும். இதை நாம் கணனி மூலம் கண்காணித்து நோய்த் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடலாம்.

ஸ்கொட்லாந்து ஆய்வாளர்கள் இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர். ஆரம்ப கட்ட சோதனையில் உள்ள "தங்க சென்சர்" விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பாலம்




ஒரு பகுதியையும் இன்னொரு பகுதியையும் இணைக்க மக்கள் பாலங்களைப் பயன்படுத்தினர். முன் காலத்தில் மரக் கட்டைகள் அல்லது பெரிய கற்பாறைகளைக் கொண்டு பாலங்களை உருவாக்கினர். தொடர்ந்து தங்கள் வசதிக்கேற்ப சீமெந்து உருக்குக் கம்பிகள் ஆகியவற்றால் பாலங்களை உருவாக்கினார்கள். பாலங்கள் உருவான வரலாறைப் பார்ப்போமா...?

கி.மு. 600 களில் வாழ்ந்த வரலாற்றியல் அறிஞர் ஹெரோடோடஸ், முதல் முதலாக யூப்ரடிஸ் நதியைக் கடக்க கல் தூண்கள் மீது மரத்திலான பாலம் அமைக்கப்பட்டிருந்ததாக பதிவு செய்திருக்கிறார்.

கி.பி. 399 களில் சீனத்துறவி ஃபாஹசியென், சிந்து நதியின் மீது தொங்கு நடைபாதைப் பாலம் அமைக்கப்பட்டிருந்ததைப் பதிவு செய்திருக்கிறார்.

இரும்புச் சங்கிலிகளால் உருவாக்கப்பட்ட தொங்கு பாலம், சிந்து நதியைக் கடக்க அமைக்கப்பட்டிருந்ததை... புத்த மத அறிஞரான ஹ்சுவான் சங் தன் வரலாற்றுக் குறிப்புகளில் பதிவு செய்திருக்கிறார்.

மேற்கத்திய உலகின் முதல் தொங்கு பாலம் 1218 இல் ஸ்விட்சர்லாந்தில் அமைக்கப்பட்ட ட்ரான்ஸ்வெர்ஸ் சங்கிலிப்பாலம் தான்.


1507 இல் ஃபிரான்சின் பரிஸ் நகரில் அமைக்கப்பட்ட "பான்ட் நோட்ரே டாமே" தான் உலகில் முழுவதும் கற்களாலேயே கட்டப்பட்ட முதல் கற்பாலம்.

இங்கிலாந்தின் துர்ஹாம் பகுதியில் டான்ஃபீல்டில் 1727 இல் ரால்ப் வுட் உலகிலேயே முதல் முதலாக ரயில்வே பாலத்தைக் கட்டினார்.

1755 இல் இரும்பு ஆர்ச் (வளைவு) மற்றும் மரங்களைக் கொண்டு ரோனே நதியின் மீது உருவாக்கப்பட்டதுதான் முதல் ஆர்ச் பாலமாகும். இதை பிரான்சை சேர்ந்த எம்.கார்வின் கட்டினார்.

உலகில் முதல் முதலாக முழுவதும் இரும்பினாலான பாலத்தை தாமஸ் பிச்சர்ட் வடிவமைக்க, ஆப்ரஹாம் டார்பே கட்டினார். இதன் பணிகள் 1779 இல் ஆரம்பிக்கப்பட்டு 81 இல் முடிவடைந்தன.

இது இங்கிலாந்தின் கோல்ப்ரூக்டேல் பகுதியில் செவொ்ன் நதியின் மீது கட்டப்பட்டது. இது இரும்புப் பாலம் என்று அழைக்கப்பட்டது.



உலகில் முதல் முதலாக வளைவு நெளிவுகளற்று கட்டப் பட்ட தொங்குபாலம், அமெரிக் காவின் பென்சில் வேனியாவின் ஜேக்கப்ஸ் கிரீக் ஆகும். இதை 1801 இல் வடிவமைத்து உருவாக்கியவர் அமெரிக்காவின் ஜேம்ஸ் ஃபின்லே ஆவார்.

1804 இல் ஸ்டெர்ம் என்ற குளத்தின் மீது கட்டப்பட்ட பாலம்தான் அவுஸ்திரேலியாவில் முதல் முதலாகக் கட்டப்பட்ட கற்பாலமாகும்.

1846-48 வரையில் சார்லஸ் எல்லெட் என்ற அமெரிக்கரால் ஓஹியோவில் கட்டப்பட்ட தொங்கு பாலமே... முதல் கம்பி இழைப் பாலமாகும். இது 1854 இல் சரிந்தது. பின்னர், 1860 இல் மீண்டும் கட்டப்பட்டது.

இங்கிலாந்தின் ராபர்ட் ஸ்டீபன்சன் 1850 இல் முதல் முதலாக வேல்ஸ் பகுதியின் மேனாய் கடற்கரையில் பிரிட்டானியா ரயில்வேவுக்காக தாங்கு தூண் பாலத்தைக் கட்டினார்.

1866 இல் முதல் முதலாக பிரான்சின் ஜோரெட் என்பவர் உருக்கிலான பாலத்தைக் கட்டினார்.

முதல் முதலாக அமெரிக்காவின் மிஸ்ஸிஸிப்பி மிஸ்ஸௌரியில் ஜேம்ஸ் ஏடெஸ் என்பவர் முதல் உருக்கினாலான தாங்கமைவுப் பாலத்தைக் கட்டினார்.

1877 இல் முதல் முதலாக இங்கிலாந்தின் டேவோன் பகுதியில் நிரந்தரமான சீமெந்து பாலம் கட்டப்பட்டது.

1883 இல் அமெரிக்காவின் நியூயோர்க் மாநிலத்தில் ப்ரூக்ளின் பாலம் கட்டப்பட்டது.

இதுதான் உலகில் முதல் முதலாக உருக்குக் கம்பிகளினால் கட்டப் பட்ட தொங்கு பாலமாகும். இதை அமெரிக்காவின் ஜான் ரோய்பிளிங் வடிமைத்துக் கட்ட ஆரம்பித்தார்.

ஆனால், பாலம் அவரது மறைவுக்குப் பின் அவரது மகன், மருமகளால் கட்டி முடிக்கப்பட்டது.

1886 இல் கனடாவின் பிரிடிஷ் கொலம்பியாவில் பிரேசர் நதியின் மீது கட்டப்பட்ட பாலம்தான் உலகின் முதல் பிடிமானப் (Cantilever) பாலமாகும்.

2001 இங்கிலாந்தின் கேட்ஷெட் மில்லியனம் பாலம் தான் உலகின் முதல் சாய்ந்தாடக்கூடிய பாலமாகும். இதை வடிவமைத்தவர் இங்கிலாந்தின் வில்கின்சன் எய்ரே ஆவார்.



# கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக்கிளை 27-ம் திகதி திறப்பு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளை நாளை மறுதினம் 27ஆம் திகதியில் இருந்து செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ளது.

ஏற்கனவேகப்பிற்றல் அலைன்ஸ், பாற்லெட் ,எஸ். எம்.பி.செக்கியூரிட்டிஸ்,எஸ்.கே.எம்.ஹோல்டிங், லங்கா செக்கியூரிட்டிஸ் மற்றும் கப்பிரல்ரஸ் செக்கியூரிட்டிஸ் போன்ற ஏழு பங்குத் தரகு நிறுவனங்கள் தங்கள் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளன.

இது குறித்து ஆணையகத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன டீ சில்வா கருத்துத் தெரிவிக்கையில்,

எம்மால் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய தொழில் முயற்சிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து தொடங்கப்படவும் அவை கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தப்படவும் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் விவசாயம், உணவு உற்பத்தி, சுற்றுலா, மீன்பிடி மற்றும் உற்பத்தித்தொழில் போன்றவை வளர்ச்சிக்கு வாய்ப்பான துறைகள். அத்துடன் இலகுவாக இங்கிருந்து இந்தியாவுக்குக் கூட ஏற்றுமதி செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் வினைத்திறனான தொழிலாளர் படையுண்டு.

யாழ்ப்பாணம் இன்னும் சிறிது காலத்திலேயே வடக்கில் நிதி மையமாக உருவாகும் எனவும் சந்தன டீ சில்வா தெரிவித்தார்.

# வடக்கிற்கு முதலீட்டுச் சபையின் வணிக ஊக்குவிப்பு வசதிகள்

## சபையின் பிரதிப் பணிப்பாளர் யாழில் விபரிப்பு

ஏனைய மாவட்டங்களில் உள்ளது போல் யாழ்.மாவட்டத்தில் தொழில் சார் வசதிவாய்ப்புக்களை அதிகரிக்க முதலீட்டுச் சபை திட்டமிட்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக இங்கு பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. தற்போது முதலீட்டுச் சபை (BOI) இப்பிராந்தியத்தில் விவசாயம் மற்றும் விவசாய உற்பத்தி, மீன்பிடித்தொழில், பால் உற்பத்தி, வினைத்திறன் விருத்தி மேம்பாடு, சுற்றுலாத்துறை ,வீடு மனை கட்டுமான அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம் ,பி.பி.ஓ போன்ற துறைகளை அடையாளம் கண்டு முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ஏ. எம்.சி.குலசேகர தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் ஓர் அங்கமாக நடைபெற்ற தொடர் கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழில் மிக அதிகமான முதலீட்டுச் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. முதலீட்டுச் சபை வடக்குக்கு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது. தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க விரும்பின் உங்களுக்கு உதவ முதலீட்டுச் சபை தயாராகவுள்ளது. இது குறித்த உதவிகளை நீங்கள் பெற விரும்பின் கச்சேரி முன்பாகவுள்ள எமது யாழ். பிராந்திய நிலையத்தடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.



# முதலீட்டு சபையுடன் எம்பேசிஸ் ஒப்பந்தம்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான எம்பேசிஸ் (MphasiS) இலங்கையில் தனது செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இதற்கமைய வரும் ஜுன் மாதம் முதல் எம்பேசிஸ் லங்கா பிரைவட் லிமிட்டெட் என்னும் பெயரில் இலங்கையில் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

வியாபார வள வெளிஸ்தாபன (BPO) மற்றும் அறிவு வள வெளிஸ்தாபன(KPO) துறை நடவடிக்கைளில் ஈடு பட்டு வரும் எம்பேசிஸ் இலங்கையில் 40 கோடி ரூபாய் பெறுமதி யான முதலீட்டு ஒப்பந்தத்தை செய் துள்ளது. இதன் மூலம் 500 பேர் தொழில் வாய்ப்பைப் பெறுவர் எம்பேசிஸ் இன் பணிப்பாளர் ரகுராமன் தெரிவித்துள்ளார்.

எம்பேசிஸ் இந்தியாவின் 7 -வது பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனம் என்பதுடன் இந்தியா ,சிங்கப்பூர் ,சீனா ,ஜப்பான் ,ஐரோப்பா , வட அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவிலும் செயற்பாட்டைக் கொண்டிருக்கிறது. முதலீட்டுச் சபையுடனான ஒப் பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா மற்றும் எம்பேசிஸின் மனிதவளத் தலைவர் உசா சுப்பிரமணியன். ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 113.16 | 114.80 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 173.04 | 176.68 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.87 | 152.50 |
| சுவிஸ் பிராங் | 103.54 | 106.82 |
| கனேடிய டொலர் | 111.82 | 115.57 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.81 | 106.96 |
| சிங்கப்பூர் டொலர் | 82.00 | 83.99 |
| ஜப்பான் யென் | 1.20 | 1.23 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.56 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.99 | |

# உலகப்பொருளாதாரத்தை மீண்டும் அச்சுறுத்திய எரிமலை; சரியான மதிப்பீடற்ற தீர்மானத்தால் உலகளவில் பாதிப்பு



ஐஸ்லாந்தின் ஈய்ஜாப் ஜல்லா ஜோகுல் (Eyjafjallajokull) என்ற எரிமலை ஒரு மாதத்திற்குள் இரண்டாவது தடவையாகவும் வெடித்ததானது பல ஐரோப்பிய விமானப் போக்குவரத்தை நிறுத்த வைத்தது.

ஐஸ்லாந்து எரிமலைகளுக்குப் பேர்போன நாடு. அதன் மேற்கிலும் தெற்கிலும் எரிமலைகள் உள்ளன. ஐஸ்லாந்தின் தென் பகுதியில் இருக்கும் ஈய்ஜாப் ஜல்லாஜோகுல் பனிமலைப் பகுதியில் எரிமலை உள்ளது. இந்த எரிமலையில் கடந்த மாதம் 20-ம் திகதி பெரும் வெடிப்பு ஏற்பட்டது. அதன் வேகம் சற்றுத் தணிந்த நிலையில் மீண்டும் கடந்த 14ஆம் திகதி வெடிப்பு ஏற்பட்டது. தரைமட்டத்தில் இருந்து 5460 அடி உயரத்தில் உள்ள இந்த எரிமலை கக்கும் புகை, நீராவி ,சாம்பல் ஆகியவை வானத்தில் பல கிலோ மீற்றர் உயரத்துக்கு வீசியடிக்கப் பட்டது. அதிலிருந்து பிரியும் புகை, சாம்பல் ஆகியவை மேகங்களில் பரவியது.

இந்த புகை மேகம் பறக்கும் விமானங்களின் இயந்திரத்தைப் பழுதாக்கிவிடும் என்று அஞ்சி விமான போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன. இதனால் 60 இலட்சம் விமானப் பயணிகள் பாதிக்கப்பட்டனர். விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்கின. உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்கனவே இந்த விமான நிறுவனங்கள் பெரும் நிதிச் சிரமங்களை சந்தித்திருந்தன. விமானசேவைகளுக்கான தடை அமுலுக்கு வந்தது முதல் இன்று வரை 60 ஆயிரத்துக்கும் அதிகமான விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. விமான நிறுவனங்களுக்கு இதனால் ,ஒரு நாளைக்கு 200 மில்லியன் டொலர் இழப்பு ஏற்படுவதாக விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் கூறுகின்றன. விமானப் போக்குவரத்துக்கு மாத்திரமல்ல வேறு வகையிலும் இந்த விவகாரம் பரந்துபட்ட உலகப் பொருளாதாரத்துக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

பயணிகள் போக்குவரத்து மட்டு



மல்ல சரக்குப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. காய்கறிகள் ,பழங்கள், பூக்கள் போன்ற சீக்கிரம் கெட்டுப் போகக்கூடிய பொருட்களுக்கு இந்த விமான நிறுவனங்கள் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியும் ஏற்பட்டது.

குறிப்பாக கென்யாவின் விவசாய ஏற்றுமதித்துறை பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந் நிலையில் விமான நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 200 கோடி டொலராக (23 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய்) இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எரிமலையிலிருந்து வெளியாகும் சாம்பல் 20 ஆயிரம் அடி உயரம்வரை மேலே எழும்பியதால் வான்வெளியில் இது பரவியுள்ளது.

இதேவேளை விமானப் போக்குவரத்துத் தடை பல மில்லியன் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறும் ஜேர்மனிய நிறுவனங்களான ஏர் பேர்லின், லுப்தான்சா ஆகியவை, காற்றில் கலந்துள்ள தூசிகளின் அளவு தொடர்பில் சரியான மதிப்பீடுகள் எதுவுமின்றி இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளன. பரீட்சார்த்தமான விமானப் பறப்பில் ஈடுபட்ட பின்பே இந் நிறுவனங்கள் இவ்வாறு குற்றம் சாட்டின.

இதற்கிடையில் இதன் பொருளாதாரத் தாக்கத்தை மதிப்பிடும் பணியில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

விமானப் போக்குவரத்தில் இந்தளவு பிரச்சினை ஏற்படுவது இதுவே முதல் தடவை என்றும் இதனைச் சமாளிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளை பல நாடுகள் ஒருங்கிணைப்புடன் அடைய வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் றோஸே பர்ரோஸோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐஸ்லாந்து எரிமலைச் சாம்பல் காரணமாக ஏற்பட்ட இடையூறுகள் உலகெங்கும் வர்த்தகத்தின் மீது மேலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஜேர்மன் நாட்டுக் கார் உற்பத்தி நிறுவனமான பி.எம்.டபிள்யூ கார் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள் குறிப்பாக மின்னணுப் பாகங்கள் கிடைக்கப் பெறுவதில் ஏற்பட்ட தடங்கல்கள் காரணமாக ஜேர்மனியில் அதற்கு இருக்கும் 3 தொழிற்சாலைகளின் உற்பத்தியை இடைநிறுத்தியது.

சீனாவில் தேங்கிக் கிடக்கும் ஏற்றுமதிப் பொருட்கள் குவிந்து வருவ



தாகவும் ,தென் கொரியாவில் பல லட்சக்கணக்கான மொபைல் போன்கள் ஏற்றுமதி செய்ய முடியாமல் தேங்கிக் கிடப்பதாகவும் பங்களாதேஷில் இருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய துணிமணிகள் மலைபோல் குவிந்து கிடப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இலங்கை உட்பட பல நாடுகளில் இருந்து ஐரோப்பாவுக்கான தபால் சேவைகள் பாதிக்கப்பட்டன. சில நாடுகள் விமானப் போக்குவரத்தின்மையால் கப்பல்களை அனுப்பி தமது பிரஜைகளை அழைத்து வந்தன.

ஐஸ்லாந்தில் உள்ள எரிமலை வெடித்துச் சிதறியதால் வெளியான சாம்பலின் அளவு மற்றும் அதன் தன்மைகளை ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகள், அறிவியல் குறிப்புக்கள் மற்றும் ஆய்வுகளைக் காட்டிலும் கணனி மூலமான வரைபடங்களை வைத்து தேவைக்கும் அதிக கூடுதலான எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துவிட்டார்கள் என்கிற விமர்சனங்கள் தற்போது எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கு.முருகதாஸ்

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4121.64 | 44.09 |
| மிலங்கா விலைச்சுட்டி | 4695.83 | 19.05 |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 1781.21 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : டயலொக் ரெலிகொம், கார்கில்ஸ்(சிலோன்), கொமர்ஷல் வங்கி ,ஆஸிரி ஹொஸ்பிட்டல், சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ்.
***சரிவைக் காட்டிய பங்குகள்.*** சிலோன் ரொபாக்கோ கம்பனி , எச். என்.பி., ஜோன் கீல்ஸ் ஹோட்டல், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங், ஏசியன் ஹோட்டல்ஸ்.

# சினிதுளிகள்



◆ பா.விஜய் நாயக னாக நடிக்கும் படம் " கலைஞரின் இளை ஞன்" இந்தப்படத்தை சுரேஷ் கிருஷ்ணா இயக்குகிறார்.

◆ அறிமுக இயக் குநர் சித்தார்த் இயக் கும் படம் பலே பாண்டி யா. இதில் ஒரு பாடலில் விஜய் ஏசுதாஸ், வேல்முருகன், அனு ராதா ஸ்ரீராம் என்று இருபது பாடகர் கள் பாடி நடத்திருக்கி றார்கள்.

◆நோர்வேயில் உள்ள தமிழ் எ:ப் எம் அழைப்பின் பேரில் ஒரு வார பயணமாக சென் றுள்ளார் பாட கர் ஹரிச் சரண்.

◆ விஜய் ஆண்டனி நடிக்கும் "நான்" படத்தில் நாயகியாக ரூபா மஞ்சரி நடிக்கிறார்.

## திரை விமர்சனம்




ஹாலிவுட்டுக்குரிய பிரமாண்டத்துடன் வெளிவந்திருக்கும் படம் " மர்மதேசம்" கடவுளாக பிறந்து மனிதனாக வாழ்கிற ஹீரோ சாம்வொர்திங்டன். உலகத்தை தன் வசப்படுத்த திட்டமிடும் வில்லனை எப்படி எதிர்கொள்கிறார் என்பதுதான் படம்.

"அவதார்" படத்தில் கலக்கிய சாம் வொர்த்திங்டன் இதில் பல மடங்கு தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி ரசிகர்களை ஆனந்தத்தில் திக்குமுக்காட வைக்கிறார். பாதாள உலகத்தின் பேய்கள், இராட்சத டிராகன்கள், பறக்கும் குதிரை என்று கிராபிக்ஸ் காட்சிகள் ரசிகர்களின் கண்களுக்கு திகட்டத் திகட்ட விருந்து படைக்கிறது.

ராமின் டிஜ்வாடி, நீல் டாவிஜின் இருவரும் பின்னணி இசையில் பிரமாதப்படுத்தியிருக்கிறார்கள். வழக்கமான கதையாக இருந்தாலும் விறுவிறுப்பான திரைக்கதை, கிராபிக்ஸ் காட்சிகள் மூலம் ரசிகர்களுக்கு விருந்து படைத்திருக்கிறார் இயக்குநர் லூயிஸ் லெட்டிரியர்.




# அவன் இவனில் மதுஷாலினி


பாலா இயக்கத்தில் ஆர்யா, விஷால் நடிக்கும் "அவன் இவன்" படத்தின அடுத்த கட்ட ஷூட்டிங், வரும் 29 ஆம் திகதி தென்காசியில் தொடங்கு கிறது. தொடர்ந்து குற்றாலம், செங்கோட்டை பகுதிகளில் நடக்கிறது. புதுமுகம் ஜனனி அய்யர் ஹீரோயினாக நடிக்கிறார்.



இன்னொரு ஹீரோயினுக்காக, "கதை" நிவேதி தாவிடம் பேசினார். ஆனால் அவர் தேர் வாகவில்லை.

எஸ்.டி. சபா இயக்கும்'16' படத்தில் நடித்துவரும் மது ஷாலினி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# வித்தியாசமான விடியல்





சரத்குமார் இரண்டு வேடங்களில் நடிக்கும் படம் "விடியல்" படம் குறித்து சரத்குமார் இவ்வாறு விபரிக்கிறார்.

அரசியல் பணி நடிகர் சங்கப் பணி என்று ஒரு பக்கம் பிஸி ஷெட்யூலில் இந்தப் படத்தின் கதையை கேட்டதும் தாமதிக்காமல் படப்பிடிப்பை ஆரம்பித்துவிட்டோம்.

டபுள் அக்ஷன் கதைகள் எனக்கு புதிதில்லை என்றாலும், இயக்குநர் கே.ஆர். செல்வராஜ் ஒவ்வொரு காட்சியையும் மனத்திரையில் பார்க்கும்படி விபரித்த விதம் பிடித்திருந்தது.

ஹீரோயின்களாக சினேகா, ஸ்ருதி நடிக்கிறார்கள். மூன்று காலகட்டங்களை உள்ளடக் கிய இதில்அந்தந்த காலகட்டத் துக்கு ஏற்ப காஸ்ட்யூம்ஸ் கதை வசனம் என்று நிறைய விடயங்களை நுணுக்கமாக கையாண்டிருக்கிறோம். இந்தப் படத்தில் என்னுடைய பல வருட நண்பர் சுந்தரேசனின் மகன் உதய்யை ஒளிப்பதிவாளராக அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்தப் படம் வழக்கமான சரத்குமார் படமாக இல்லாமல் முற்றிலும் புதிய பரிமாணத்தில் இருக்கும் என்கிறார் சரத்.


# இலங்கையின் அழைப்பை ஏற்க மறுத்த தமிழ் சினிமா முன்னணி நாயகர்கள்

இலங்கையில் நடைபெறவுள்ள திரைப்பட விழாவில் பங்கேற்க வருமாறு அனுப்பப்பட்ட அழைப்பிதழை வாங்க தமிழ் சினிமாவின் முன்னணி ஹீரோக்கள் மறுத்துள்ளனர் என்பதுதான் கோலிவுட்டின் பிந்திய பரபரப்புத் தகவல் .

இலங்கை தலைநகர் கொழும்பில் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை ஐ.ஐ.எப்.ஏ. எனப்படும் சர்வதேச இந்தியத் திரைப்பட விருது வழங்கும் விழா நடக்கிறது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக பாலிவுட் நடிகர் அமிதாப்பச்சன் அவரது மகன் அபிஷேக் பச்சன், மருமகள் ஐஸ்வர்யாராய் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

இந்த விழாவில் பங்கேற்க வருமாறு தமிழின் முன்னணி நாயகர்களுக்கு இலங்கை அரசு சார்பிலும், அமிதாப்பச்சன் சார்பிலும் அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறோம். இலங்கையில் நடக்கும் விழா என்பதால் அழைப்பிதழை பார்த்து முன்னணி நாயகர்கள் பலரும் மிரண்டு போய் இருக்கிறார்களாம். அதுபற்றி கருத்து சொல்லக்கூட ஒருவரும் முன்வரவில்லை. கமல்ஹாசன், அஜித், விஜய் என முன்னணி நாயகர்கள் அழைப்பிதழுக்கு எந்தப்பதிலும் அளிக்காமல் புறக்கணித்து விட்டதால், இலங்கையும் தமிழ் சினிமாவும் எந்த அளவு பிரிக்க முடியாதது என்பதை உணர்த்த விழாக்குழுவினர், இரண்டாம் கட்ட நடிகர்களுக்கு வலைவீசி வருவதாக தகவல்.



அதேநேரம் இந்த விவகாரத்தில் வசமாய் மாட்டிக் கொண்டிருப்பவர் டைரக்டர் மணிரத்னம் என்று கூறப்படுகிறது. மணிரத்னம் தயாரிப்பில் உருவாகியிருக்கும் ராவணா படத்தை இலங்கை திரைப்பட விழாவில் திரையிட திட்டமிட்டிருக்கும் விழாக்குழுவினர், மணிரத்னத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கை விழாவில் கலந்துகொண்டால், தன் மீது பெரும் மதிப்பு வைத்திருக்கும் தமிழ் ரசிகர்களின் கோபத்தை சம்பாதிக்க வேண்டியிருக்குமே என்ற குழப்பத்தில் இருக்கிறாராம் மணி.

# கமலின் புதிய படம் காருண்யம்

நடிகர் கமல்ஹாசன் அடுத்து நடிக்கவிருந்த புதிய படத்திற்கு யாவரும் கேளிர் என்று பெயர் சூட்டியிருந் தனர். உதயநிதி ஸ்ராலின் தயாரிப்பில் டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் இந்தப் படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிகை த்ரிஷா நடிக்கவுள் ளார்.



நடிகர் மாதவனும், கண்ணதாசனின் மகள் விஷாலி கண்ணதாசனும் முக்கிய கரக்டர்களில் நடிக் கிறார்கள். முழு நீள காமெடிப் படமாக உருவாக விருக்கும் இப்படத்தின் டைட்டிலை இப்போது காருண்யம் என்று மாற்றியிருக்கிறார்கள். முக்கோண காதல்கதை யான காருண்யம் படத்திற்கு தேவிஸ்ரீபிரசாத் இசையமைக் கிறார். இவர் ஏற்கனவே தசாவதாரம் படத்திற்கு பின்னணி இசைமட்டும் அமைத்திருக்கும் தேவிஸ்ரீ இப்படத்தில் முழு இசையையும் கவனிக்கப் போகிறார்.

இதேபோல அன்பேசிவம் படத்திற்குப் பின்னர் மாதவன் கமலுடன் இணையும் படம் இது. காருண்யம் படத்தின் ஆரம்ப கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது.

# விகிர்தி வருடம் உங்களுக்கு எப்படி?



## கும்பம்

(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்)

**சந்தர்ப்பங்களையெல்லாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் கும்பராசி நேயர்களே!**

விகிர்தி ஆண்டு தொடங்கி வியாழனின் பெயர்ச்சி வந்ததும், உங்கள் வாழ்க்கையில் மாபெரும் மாற்றங்களைச் சந்திக்கப் போகிறீர்கள்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒரு புறம் இருந்தாலும் அதிச்சாரமாக இருந்த குரு அதை பார்க்கப் போவதால் தான் உங்களுக்கு நற்பலன்கள் நடைபெறப் போகிறது என்று சொல்லலாம்.

எனவே பார்க்கும் குருவைப் பலப்படுத்த ஆண்டின் தொடக்கம் முதலே குரு வழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

விகிர்தியின் தொடக்க நாளில் சந்திரன் 2 இல் சஞ்சரிக்கிறார். எனவே கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். இலாப ஸ்தானத்து இராகு இலாபத்தை வழங்கும். 5 ஆம் இடத்தில் உள்ள கேதுவைக் குரு பார்ப்பதால் பஞ்சம ஸ்தானம் புனிதமடைகிறது. குழந்தைச் செல்வங்களால் யோகமும், பூர்வீகச் சொத்துக்களால் இலாபமும் உருவாகும்.

சித்திரை 19 ஆம் திகதி குருப் பெயர்ச்சிக்குப் பிறகு தனலாபாதிபதி வலிமையடைவதால் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அஷ்டமத்துச் சனியால் அனுகூலம் கிடைக்க சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதோடு வாக்கு ஸ்தான குருவை பலப்படுத்த குரு வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

குண்டூசி அளவுள்ள விடயத்தை யானை அளவு மிகைப்படுத்திப் பார்ப்பவர்கள் நீங்கள். ஒரு காரியத்தை உங்களிடம் ஒப்படைத்தால் அதை முடித்துக் கொடுக்கும் வரை தூங்க மாட்டீர்கள்.

எதிரிகளை மன்னிக்கும் சுபாவம் உங்களிடம் குறைவுதான். சிக்கனத்தை கையாள்வீர்கள், தன்னம்பிக்கையை மட்டும் நீங்கள் தளர்த்திக் கொள்ளாதவராக இருந்தால் முன்னேற்றத்தை உயர்த்திக் கொள்ளலாம். உங்களை பழமைவாதிகள் என்றும் சொல்ல இயலாது. புதுமைவாதிகள் என்றும் சொல்ல இயலாது.

உங்களுக்கு இலாப ஸ்தானத்தில் இராகுவும் 5இல் கேதுவும் உலா வருகின்றார்கள். எனவே வரவும்–செலவும் சமமாகும். புத–சுக்கிர–சூரிய சேர்க்கை சகாய ஸ்தானத்தில் இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். சனியின் பலத்தைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்பதை எடை போடலாம்.

அதுமட்டுமல்ல குரு, சுக்கிரனின் பலத்தையும் அறிந்து செயற்பட்டால் நீங்கள் வெற்றி மீது வெற்றி காணலாம். களத்திர ஸ்தானாதிபதியாக சூரியன் வருவதால் திருமண வாழ்க்கைக்குப் பிறகே உங்களுக்கு பிரகாசமான எதிர்காலம் வந்து சேரும். பொருத்தம் பார்த்துச் செய்யும் திருமணங்களால் பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சுய ஜாதகத்தில் யோகம் தரும் கிரகம் எது என்பதை ஆராய்ந்து அதன் பாதசார அடிப்படையில் கிரகத்திற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்தக் கொண்டால் பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள இயலும்.

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கிறார். இராசிநாதனாக விளங்கும் சனிபகவான் எட்டில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. திடீர் திடீரென சிந்தனைகள்மாறும்.

செல்வ நிலையில் பற்றாக்குறை உருவாகும். மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும் நேரமிது. கூட்டு முயற்சி செய்வோர் தனித்து இயங்க முற்படுவர். தனித்து இயங்குபவர் கூட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

விகிர்தியின் தொடக்கத்தில் குருவும் ஜென்ம குருவாகச் சஞ்சரிக்கிறார். எனவே பயணங்கள் அதிகரிக்கும். வாகனப் பழுதுகளும் அதனால் விரயங்களும் ஏற்படலாம். இக்காலத்தில் இடம் ,பூமி, நகை என்று வாங்கிச் சுபவிரயமாக மாற்றிக் கொள்வதன் மூலம் வீண் விரயங்களிலிருந்து தப்பிக்கலாம். குறிப்பாக சனிக்கிழமை தோறும் சனீஸ்வரருக்கு எள்தீபம் ஏற்றி வழிபட்டு வருவதோடு வீட்டிலும் எள்கலந்த சாதம் வைப்பது நல்லது.

12க்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு இணங்க திடீர் யோகத்தைக் கொடுக்கலாம்.

கைவிட்டுப் போன பொருட்கள் மீண்டும் வந்து சேர சனி வழி வகுப்பார். எட்டாமிடத்தில் உள்ள சனிபகவானை இனிதே தொழுதால் பலன் தருவார். திட்டமனைத்தும் வெற்றிபெற சிறப்பாய்ச் சனியை வழிபடுவோம் என்று நீங்கள் சனியை வழிபட வேண்டும். பிரதோஷ காலத்தில் நந்தீஸ்வரரையும் வழிபட வேண்டும்.

மீனத்தில் குரு சஞ்சரித்த பிறகு மிகச் சிறந்த பலன்களை அள்ளி வழங்கப் போகிறார். தனலாபாதிபதி தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தனவரவு தாராளமாக வந்து சேரும் அல்லவா? பணப்புழக்கம் அதிகரிக்கும், பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், பதவி மாற்றம் முதல் பலவிதமாற்றங்கள் வந்து சேரும்.

**இரண்டில் குரு வந்தால் இல்லத்தில் மகிழ்ச்சி வரும்! திரண்ட செல்வமுடன் தேனான வாழ்வமையும்! உறவினர்கள் பகைமாறி உற்சாகம் குடிகொள்ளும்!**

குருவின் வழிபாட்டால் கொள்கையுடன் வாழ்ந்திடலாம்! என்று ஜோதிட சாஸ்திரம் கூறுகிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது இல்லத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும் மாதமாக அமைகிறது. 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவதால் சென்ற ஆண்டில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவீர்கள்.

ஏராளமாக இருந்த கடனைத் தீர்த்து ஏதோ ஓரளவு கடன் இருக்கிறது என்று சொல்வீர்கள். தெசாபுத்தி பலம் பெற்றவர்கள் கூட்டுத் தொழில் செய்ய முன்வருவர்.

வருடத் தொடக்கம் முதல் வைகாசி 12 ஆம் திகதி வரை சனி வக்ரம் பெறுகிறார். மீண்டும் தை 8 ஆம்திகதி முதல் பங்குனி 30 ஆம் திகதி வரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இக்காலம் ஓர் பொற்காலம் ஆகும். இக்காலத் தில் வளர்ச்சி கூடும்.

எக்காலத்திலும் இல்லாத அளவு வருமானம் பெருகும். திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும் பயணங்கள் அதிகரிக்கும். நீண்ட தூரப் பயணங்களால் கூட நிலையான வருமானம் வந்து சேரும்.

மந்த நிலையில் இருந்த அலுவலகப் பணிகள் துரிதமாக முடியும். பதவியில் உள்ளவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பர்.

உதவிக்கரம் நீட்டுவோரின் எண்ணிக்கை கூடும். சம்பள உயர்வு மற்றும் உத்தியோக உயர்வுகள் எதிர்பார்த்தபடி அமையும். அரசு வழி அனுகூலம் கிடைக்கும். வங்கியில் கடனுதவி பெற்றும் வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். பணப் பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வசூலாகும்.

வியாபாரப் போட்டிகள் அகலும். இக்காலம் பொற்காலமாக அமைய நின்ற கோலத்துப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. மணிகட்டிய ஆஞ்சநேயர் உங்களுக்கு மகத்தான வாழ்வை அமைத்துக் கொடுப்பார்.

மார்கழி 22 ஆம் திகதி முதல் தை 29 ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். 3, 10 க்கு அதிபதி உச்சம் பெறும் பொழுது முன்னேற்றங்கள் கூடும். கிளைத் தொழில் தொடங்கும் சூழ்நிலை உருவாகும். உடன்பிறப்புகள் உங்களிடமே சொத்துக்களைத் தந்து பராமரிக்கச் சொல்வர். பூர்வீக சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்கி இல்லம் கட்டிக்குடியேறுவர்.

சித்திரை 19 ஆம் திகதி (02.05.2010) முதல் ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி (06.11. 2010) வரை மீன ராசியில் அதிச்சாரமாக குரு சஞ்சரிக்கப் போகிறார்.

ஐப்பசி 21 ஆம் திகதி (07.11.2010) முதல் கார்த்திகை 4 ஆம் திகதி (20.11.2010) வரை கும்பராசியில் குரு வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கப் போகிறார்.

ஜென்ம குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் புத்திர ஸ்தானம் பலமடைகிறது.

எனவே புத்திரப் பேறுக்கான வாய்ப்பும் புத்திர லாபமும் கிடைக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்து முயற்சிகள் அனுகூலமாக இருக்கும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். வாயில் தேடி வரன்கள் வந்து சேரும்.

தித்திக்கும் விதத்தில் திருமணப் பேச்சுகள் முடிவிற்கு வரும். தூரத்து உறவினர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். சகோதரர்கள் சமரசத்திற்கு ஒத்து வருவர். பெற்றோர் வழியில் ஏற்பட்ட விரிசல் மறையும், சான்றோர்கள் மற்றும் அருளாளர்களின் ஆலோசனைகளைக் கேட்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முன் வருவீர்கள். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும்.

சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும் அனுமனையும் விடாது வழிபட்டு வருவது நல்லது.

விகிர்தி ஆண்டின் தொடக்கத்தில் இராசிநாதன் சனி வக்ரம் பெறுவது நன்மைதான். வீட்டில் சுப விரயங்கள் அதிகரிக்கும். விருந்து, விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். மாமன் வழியில் நடைபெறும்

**சிவல்புரி சிங்காரம்**

மங்கல நிகழ்ச்சியை முன்நின்று நடத்துவீர்கள்.

கணவன்– மனைவிக்குள் அந்யோன்யம் அதிகரிக்கும் ,உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு பதவிஉயர்வு ,சம்பள உயர்வு கிடைக்கும்.

ஆனால் வேலைப்பளு கூடும். யோக பலம் பெற்ற நாளில் நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொண்டால் நலம் யாவும் வீடு வந்து சேரும். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படாதிருக்க சுய ஜாதக ரீதியாக இராகு – கேதுக்கள் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

# துயரங்களை எதிர்நோக்கி வரும் மீள்குடியேறிய மக்கள்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேற்றப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையில்அவர்கள் பாரிய சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எதிர் நோக்கி வருகின்றனர்.

குடியேற்றப்பட்டவர்களில் எவ ருக்கும் இதுவரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிதியுதவி வழங்கிய அரச சார்பற்ற நிறுவனம் தாம் நிதி நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதால் குறித்த நிதியுதவியை வழங்க முடியாதுள்ளதாக அறிவித்திருந்தது.

அதேவேளை மீள்க்குடியேற்றப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ளதால் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலைமையில் மீளக்குடியேறிய மக்கள் வாழ்வதற்கு வழியின்றி பெரும் துயரங்களை எதிரநோக்கி வருகின்றனர். (2-6)

# பதவிகளைக் கோராது நாட்டின் நலனுக்காக செயற்படுவேன்

## ரோஹித்த போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவித பதவிகளையும் கோராது நாட்டின் நலனுக்காக தொடர்ந்தும் செயற்பட உள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த பொகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி இலக்குகளை எட்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷவின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் அரசியலிலிருந்து ஓய்வு பெறும் திட்டமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்கான பங்களிப்பினையோ அல்லது அரசியலையோ கைவிடப் போவதில்லை என அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளை கோரியதில்லை எனவும் மக்களிடம் வாக்குகளை தவிர வேறு எதனையும் கோரியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சிலிருந்து பிரியாவிடை பெற்றுச் சென்ற சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

# இவ்வருடம் 20 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள்

மஹிந்த சிந்தனை எதிர்காலத் திட்டத்துக்கு அமைவாக 2010 ஆம் ஆண்டுக்கு மேலும் இருபது ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் எல்.எஸ். பலங்சூரிய தெரிவித்தார்.

கடந்த நான்கு வருட காலத்தில் தொண்ணூற்றொரு ஆயிரம் குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும் இதற்காக நான்காயிரத்து நூற்று இருபத்தேழு மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஒரு வீட்டுக்கு கூடியபட்ச நிதியுதவியாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாகவும் இதற்குப் புறம்பாக 2010 ஆம் ஆண்டு நகரத்தைக் கட்டி எழுப்புவோம் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 500 அடுக்குமாடி வீடுகளை அமைக்கவும் உத்தேசித்துள்ளதாக பலங்சூரிய மேலும் தெரிவித்தார். (2-6)

# களம் பல கண்ட யாழ் கோட்டை 14

## ஆங்கிலேயர் ஆட்சி

27, செப்ரெம்பர் 1795

ஆங்கிலேயக் கேர்னல் பீற்றர் றெயினர்ஸ் ஸ்ரூவார்ட் தலைமையில் கப்பற் படைத்திரளொன்று பருத்தித்துறையில் இறங்கியது. வெகு இலகுவாகத் திருகோணமலை பிரடெரிக் கோட்டையையும் மட்டக்களப்புக் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்ட மகிழ்வோடும் ஆணவத்தோடும் ஸ்ரூவார்ட்டின் படை பருத்தித்துறையிலிறங்கி அணிவகுத்து யாழ்ப்பாணக் கோட்டையை நோக்கி முன்னேறியது. 28 செப்ரெம்பர் 1795 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயப் படையால் முற்றுகையிடப்பட்டது. கேர்னல் ஸ்ரூவார்ட் கோட்டைக்குள் இருப்போரைச் சரணடையுமாறு செய்தி அனுப்பினான்.

ஒல்லாந்த கம்மாந்தராக அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த கம்மாந்தர் றாகெட்(Raket) என்பவனால் எதுவும் செய்யமுடியவில்லை. சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை. கிழக்குக் கரையோரக் கோட்டைகள் அனைத்தும் ஆங்கிலேயரிடம் சரணடைந்த நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கைப்பற்றுவதென்பது பயனற்றதென றாகெட் எண்ணினான். கோட்டைக்குள் இருந்த 39 ஒல்லாந்தரும் 98 இந்தியச்சிப்பாய்களும்(Sepays) வெள்ளைக் கொடி ஏந்தி வெளிவந்து சரணடைந்தனர்.





யாழ்.கோட்டையினுள் அமைந்த மைதானத்தில் இருந்து வடக்கே நோக்கிய போது தெரிந்த கோட்டையின் உள்ளமைப்பு.(ஸ்ரெயிகர் என்பவரின் வரைபு-1710)

அவர்கள் வரிசையாக வெளிவந்தனர். வெளியில் வரும் போது கம்மாந்தர் றாகெட்டிற்கு அவனது முன்னோன் கொமு சாறி வன் ஹூன்ஸ் சரணடைந்த போர்த்துக்கேயருக் குச் செய்த நடத்தைகள் நினைவு வந்திருக்கும். அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்து முழு நிர்வாணமாக்கிப் பரிசோதித்து போர்த்துக்கேயரை வன் ஹூன்ஸ் கப்பலேற்றியனுப்பி வைத்தான். ஆங்கிலேயர் அவ்வாறு செய்யவில்லை. ஒல்லாந்தர் தமது ஆயுதங்களை ஸ்ரூவார்ட் முன் குவித்தனர். ஒல்லாந்த உயர் இராணுவ அதிகாரிகள் மட்டும் தம் அரை வாள்களை அனுமதிக்கப்பட்டனர். அவர்களது தனிப்பட்ட பொருட்களை எடுத் துச் செல்ல ஸ்ரூவார்ட் அனுமதித்தான். ஆனால் பொதுச் சொத்துக்கள், துப்பாக்கிகள், க்ளஞ்சியப் பொருட்கள், காகிதங்கள் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்கவில்லை. சரணடைந்த ஒல்லாந்தர் தம்மைக் கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு கோரியபோதிலும் கேர்னல் ஸ்ரூவார்ட் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களை யுத்தக் கைதிகளாக இந்தியாவிற்கு அனுப்பி வைத்தான்.

யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது 14 பெப்ரவரி, 1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தரின் கொழும்புக் கோட்டையும் சரணடைந்தது. கேர்னல் ஜேம்ஸ் ஸ்ரூவார்ட் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களுக்கு கவனராக நியமிக்கப்பட்டான். மக்களது நம்பிக்கையைப் பெறும் நோக்கமாக மதக்கட்டுப்பாட்டை இவன் தளர்த்தி விட்டான். முதற் கட்டமாக கத்தோலிக்க குருமார் தமது சமயப்பணியைத் தொடரலாமெனவும் மக்கள் தாம் விரும்பிய மதத்தை அனுட்டிக்கலாமெனவும் ஸ்ரூவார்ட் சட்டத்தைத் தளர்த்தினான். எனினும் வருமானம் ஈட்டுவதற்கு உதவிய எச் சட்டத்தையும் ஆங்கிலேயர் தளர்த்தவில்லை.

யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பாண வரி சேகரிப்புப் பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியது. யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகள் இந்த வரி சேகரிப்புப் பிராந்தி யத்திலமைந்தன. சென்னையிலிருந்து வரி சேகரிப்பு உத்தியோகத்தர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர் அவர்கள் இந்தியர்கள். அவர்கள் கோட்டைக்குள் கலெக்டர் ஒபிஸ் ஒன்றைக் கச்சேரி என்ற பெயரில் அமைத்தனர். கச்சேரி என்பது ஹிந்திச் சொல்லாகும். அமில்தார் (வரி வசூலிப்பவர் ), கொத்வால் (பொலிஸ்), குமாஸ்தா (லிகிதர்) என்ற பதவி களைச் சென்னையிலிருந்து இங்கு வந்த உத்தியோகத்தர்களே வகித்தனர். சிப்பாய்களாகப் போர்த்துக்கேயர் படையிலும் ஒல்லாந்தர் படையிலும் கூலிக்கு வேலைபார்த்த இந்தியர்கள் ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்கும் உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். மதராசி வரி வசூலிப்போர் தம் எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொண்ட தால் பின்னர் இவர்களிடமிருந்து பொறுப்பு மீள எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆங்கிலேய நிர்வாகிகள் மக்கள் மீது பல்வேறு வரிகளை விதித்தனர். மீன்வரி, உப்பு வரி, சராரய வரி, கள் வரி , தலைவரி எனப் பல வரிகள் ஒரு கட்டத்தில் 1, செப்டம்பர் 1796 இல் தென்னை வரியையும் விதித்தனர். ஒவ்வொரு தென்னைக்கும் வருடத்திற்கு ஒரு வெள்ளிப் பணம் வரியாகச் செலுத்துமாறு மக்களைக் கேட்டனர். மக்களது எதிர்ப்பால் 1797, மார்ச் மாதத்தில் இந்த வரி நீக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆங்கிலேயரின் கொடி பறந்த காலவேளைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவகையாயினும் அவற்றில் முக்கியமான சிலவற்றை நோக்குவோம். ஆங்கிலேயரின் ஒன்றரை நூற்றாண்டாட்சியில் அடிமைத்தனமாக வாழ்ந்து மக்கள் பழகிவிட்டனர்.

யாழ்ப்பாணத்தின் கோட்டையின் தளபதியாக கேர்னல் பார்பெற் Barbet என்பவன் பொறுப்பேற்றான் (1796). ஒல்லாந்தரிடமிருந்து கையேற்ற பல தேவாவலயங்கள் ஆராதனையில்லாது கைவிடப்பட்டன. சுண்டுக்குழித் தேவாலயமும் அவற்றில் ஒன்றாகும். இந்தத் தேவாலயத்தை கேர்னல் பார்பெற்தனது ஆட்டுப்பட்டியை அடைப்பதற் கான ஆட்டுக் கொட்டிலாகப் பயன்படுத்தி னான் என அறியக்கிடக்கிறது. 1801 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி வரை கிறிஸ்தியன் தாவீதுப் பாதிரியார் இத் தேவாயலயத்தில் ஆராதனை நடாத்தும் வரை இது ஆட்டுக் கொட்டிலாக விளங்கியது.

### செங்கை ஆழியான்

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கை முழுவதற்கும் ஒரு தேசாதிபதி நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். இலங்கை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு அரசாங்க ஏசண்டர் நியமிக்கப்பட்டார். வட மாகாணத்திற்கு முதன் முதல் அரசாங்க ஏசண்டராக நியமிக்கப்பட்டவர் மேற்சொன்ன கேர்னல் பார்பெற் ஆவார். 1801 ஆம் ஆண்டு பதவியேற்ற இவர் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து நிர்வாகத்தைக் கவனித்தார். 1804 ஆம் ஆண்டளவில் கோட்டை மாளிகையை விட்டு வெளியேறி யாழ்ப்பாண கச்சேரி வளவான பழைய பூங்காவில் தனக்கென வீடு ஒன்றினை அமைத்துக் குடியேறினார். கோட்டை மாளிகையில் அவருக்கு அடுத்த தரத்திலிருந்தமேயர் ஒருவன் குடி புகுந்தான். அந்த வருடமே யாழ்ப்பாணக்கோட்டை தனது முக்கிய நிர்வாக மையம் என்ற அந்தஸ்தை இழந்தது.

(தொடரும்)

## இலங்கைப் பிரதமருக்கு இந்திய பிரதமர் வாழ்த்து





(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதமாரக நியமிக்கப்பட்டுள்ள டி.எம். ஜயரட்ன விற்கு இந்தியப் பிரதமர் மன்மோ கன் சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களின் சார்பில் பிரதமருக்கு வாழ்த்து தெரிவிப்பதாக செய்தியில் குறிப்பிடப் பட்டுள் ளது.

டி.எம்.ஜயரட்ன பிரதமராக நியமிக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதாக இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள் ளன.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ள இதனை ஓர் சந்தர்ப்பமாக பயன்படுத்தவுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் இலங்கைப் பிரதமருடன் இணைந்து அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாக மன்மோகன் சிங் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

## வடக்கு ரயில் பாதை அமைக்கும் பணியில் இந்தியபொறியியலாளர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

வவுனியா மற்றும் மதவாச்சி பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ள இந்திய பொற்றியிலாளர்கள் குழு ஒன்று வடபகுதிக்கான ரயில் பாதையை அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மதவாச்சியில் இருந்து தலை மன்னார் வுரையிலா்ன ரயில் பாதையின் நிர்மானப் பணிகளை இந்திய நிறுவனம் ஒன்று மேற்கொண்டு வருகின்றது. அதனைத் தொடர்ந்து ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை அமைப்பு வேலை கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வவுனியா தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரை எஞ்சியுள்ள மூன்று மைல் தூரம் கொண்ட ரயில் பாதையை அமைக்க சுமார் மூன்று மாத காலம் எடுக்கும் என ரயில்வே திணைக்களம் எதிர்பார்க்கின்றது.

வவுனியாவுக்கு வருகை தந்துள்ள இந்தியப் பொறியியலாளர்கள் தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதையை அமைக்கும் பணிகளை கண்காணித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(2-6)

## மாருதம் இதழ் வெளிவந்துள்ளது

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சமூக ,கல்வி , கலை இலக்கிய சஞ்சிகையான மாருதத்தின் சித்திரை - ஐப்பசி இதழ் வெளிவந்துள்ளது.

கவிஞர் இ.முருகையனின் அட்டைப் படத்தை தாங்கி வந்துள்ள இந்த இதழில் பல கவிதைகள் ,கட்டுரைகள் ,இலக்கிய ஆய்வுகள் ,சிறுகதை ,திறனாய்வுகள் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கமாக கொண்டுள்ளது.

(2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

ஊரென்ன உறவென்ன
நாடென்ன மொழியென்ன
உலகெலாம் ஒன்றெனப் பாடு – இந்த
உண்மையை வேதமென்றோது

தரணி தன்னிலே நீதி – இங்கு
எங்குதான் தேடினும் துன்பமே மீதி
யாரினி தேற்றுவார் உலகை – எனில்
அன்பெனும் ஒன்றினால் வெல்வோம் உலகை

அன்பு வள்ளல்

### சக்திகொடு

வாழ்க்கையில் இன்பங்களைக்
காணாத பொழுதிலும்
சந்தோசத்தை தூரத்திலிருந்தே
எட்டிப் பார்க்க வேண்டும்
என விரும்புகின்றேன்
மனதில் உள்ள வடுக்கள் ஆற
சந்தோசம் திரும்ப
வாடியிருக்கும் மனதிற்கு
நம்பிக்கையைத் தர சக்திகொடு...

இ.பிரியங்கா
வல்வெட்டித்துறை

### சித்திரை வாழ்த்து

வசந்தம் பூக்கவும் வானம் சிவக்கவும்
விழிக்கும் சித்திரை வாழ்த்தும்
சாந்தம் வாழவும் சாதனம் குவியவும்
சிவக்கும் சித்திரை வாழ்த்தும்

**********

தாமரை சிரிக்கவும் தாவணி பறக்கவும்
தங்கச் சித்திரை வாழ்த்தும்
சாமரை வீசவும் சமத்துவம் நிற்கவும்
சந்தனச் சித்திரை வாழ்த்தும்

**********

குடிசைகள் மகிழவும் கோபுரங்கள் மாறவும்
கோமணச் சித்திரை வாழ்த்தும்
உழைப்பு பெருகவும் உற்பத்தி குவியவும்
உயிர்க்கும் சித்திரை வாழ்த்தும்

– நல்லை அமிழ்தன் –

### மரபழிவு

இசை அடுக்குகளினூடே
தாளத்தின் ஓசையும்
இடையிடையே ஒலித்து
அமைகின்றது...
அதிர்வுகளே ஓசையாய்
ஓசையே அதிர்வுகளாய்
ஓடி ஒலிக்கின்றது...
இசையின் அமைதியொன்று
இரைச்சலாய் பெரும் ஓலமாய்
ஒய்யாரமாய் ஒலிக்கின்றது
அதனால்....!
ஒலங்களாகவே சங்கமிக்கின்றன
தாளமில்லாவோசை....!

பொலிகையூர்
பொன். சுகந்தன்

### மனிதன்

படைப்பின் ரகசியத்தில்
செதுக்கப்பட்ட...
பகுத்தறிவுச் சிலை

பூலக்சி
கல்லுவம்

### இமயம் தொட...

நடந்து கொண்டே இரு
நாய்கள் என்றால்
குரைக்கத்தான் செய்யும்
நரிகள் என்றால்
வஞ்சகத்துடன்தான் வாழும்
உன் பயணம் உறுதியானது
உலகிற்குப் புலப்படும்வரை
நீ... நடந்துகொண்டே இரு....

மாவை. நா.கஜேந்திரா

### பிரிவு

பாசம் என்னும் சொல்லுக்கு
அர்த்தமாய் விளங்கியவர்கள் - இன்று
தொலைதூரம் செல்கின்றனர்
பிரிவு எனும் வானில்
எத்தனை நாட்கள் - அந்த
இனிமையான வாழ்வு
சிட்டுக் குருவிகள் போல்
சிறகடித்துப் பறந்தவர்களால்
எப்படித் தாங்க முடியும் - இந்த
பிரிவின் துயரத்தை
இப்போது அந்தக்
கணப்பொழுதை
நினைத்துப் பார்க்கும் போது
கண்களிலிருந்து
கண்ணீர்த் துளிகள் தான்
பூமியை நனைக்கின்றன
கல்மனம் கொண்ட
மனித இதயங்களும்
கசிந்திடும் ஒருமுறை
பிரிவைச் சந்தித்தால்

நவரத்தினம் சதீஸ்
கந்தர்மடம்

### விம்பம்

சிலநேரம்
நான் அழுகின்றேனே....
எனக்கெதற்கு காதலென்று....
ஆனால்...
வரும் கண்ணீரில்
உன் விம்பம் கண்டு
மீண்டும் சிரிக்கின்றேன்
நீ எனக்கு வேண்டுமென்று....

மகே - மனோ
கொற்றையூர்

## மௌனத்தின் தேடல் – 16



### பக்திப் பரவசம்

பக்திப் பரவசத்தில்
பக்தர்கள் கூட்டம்
சூழ்ந்துவர – இறைவன்
பிரதிநிதியாய் நின்று
வழிகாட்டிடுவீர் ஐயா

சிவநாதன் சுரேஸ்சன்ட்
பத்தமேனி

கந்தகப் புகையில்
கருகிய கண்கள்
கற்பூர ஒளியில்
கடவுளைத் தேடுகின்றன

து.துவாரகா
சங்கானை

### புதுப் பதிகம் பாடுகின்றார்

நம் மூதாதையர்
விகாரைக்குள் தான்
அன்று நம் இறைவனை
வணங்கியதாக
புகாரொன்று கூறப்பட்டு
புதுப்பதிகம் பாடுகிறாரே
இது உண்மையோவென
இந்த மூதாட்டி விடைகேட்டு
வேண்டுகிறாளோ

தென்னவ்லை
அரிபுத்திரன் -

### நிறைவேறுமோ

கற்பூரச் சுடரொளியில்
கடவுளைக் கண்டுதொழுது
பெற்றெடுத்த பிள்ளைகளை
பாழும் சிறையால்
மீட்டுத்தாவென
கற்பூரம்போல் எரிந்துருகும்
தாயிவள் வேண்டுதல்
நிறைவேறுமோ?

அல்வையூர்
சி.சிவநேசன்

### கடவுளிடம் ஓர் வேண்டுகோள்!

அந்தமில் பெருமையுள்ள
ஆண்டவனே! உன்
அடியை நான்
சரண்புகுந்தேன்!
நடந்திட்ட போரினாலே
நாம் இழந்திட்டவைகள்
ஒன்றா! இரண்டா!
கட்டிய புருஷனை இழந்து
பெற்ற பிள்ளைகளைப்
பிரிந்து வாடும் எனக்கு
உற்றவா நீயென்றும்
உறுதுணையாயிருக்க
புத்தாண்டு வேளையில்
பக்தியுடன் உன் பாதம்
பணிகின்றேன்
இழந்து போன என்
வாழ்வை மீட்டுத்தா!

குறிஞ்சிக்கவி
குப்பிளான்

### விடிந்தது நல் எதிர்காலம்

எரிந்த தேசமதில்
நிகழ்ந்த சோகமதை
சுமந்த ஆண்டு
உருண்டு கொண்டோட
மலர்ந்த நாளினில்
தேன் நிறைந்த பூவாய்
முகைமெல்ல அரும்ப
இறையருள் வேண்டிட
பொலிந்த தேகமுடன்
பூநூல் கொண்ட
பூசகர் நிறைந்த
தீபமதை கையில்
ஏந்தி விடிந்தது
நல் எதிர்காலம்
என வாழ்த்துகின்றாரோ?

த.கயானந்தி

கற்பூர தீபத்தின்
பிரகாசத்தின்
கடவுளின் கிருபை
கிட்டுமானால்
கஷ்டப்படும் மக்களின்
வாழ்க்கைப் படகு
கரையேறுவது
சிந்திக்குமா?
இருண்ட வாழ்வுக்கு
விடிவு கிடைக்க
இறைவன் அருள்
புரிவாரா?

கந்த.ஞானமுத்து
கைதடி மேற்கு–02

சங்குநாதம்

## மௌனத்தின் தேடல்- 17



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.04.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# நளினிக்கு சிறையை கல்லறையாக்க நடக்கும் நாடகம்

ராஜீவ் கொலை வழக்கில் வேலூர் பெண்கள் தனி சிறையில் 19 வருடங்களாக தண்டனை அனுபவித்து வரும் நளினி தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று போராடி வந்தார். இது தொடர்பாக அமைக்கப்பட்ட அறிவுரைக் குழு, சட்ட ஒழுங்கு என பல காரணங்களை எடுத்து வைத்ததால் தமிழக அரசு நளினியை விடு விக்க மறுத்துவிட்டது.

ஆனாலும் சட்டத்துக்குப் புறம்பாக தான் செயல்படவில்லை என்பதை நன்னடத்தை அதிகாரியே கொடுத்த சான்று மூலமாக வலியுறுத்தி மீண்டும் சட்டரீதியான போராட்டங்களில் நளினி இறங்க முற்பட கடந்த 20ஆம் திகதி அவர் மீது திடீர் குற்றச்சாட்டு பாய்ந்தது. சட்டத்துக்குப் புறம்பாக சிறைக்குள் அவர் செல்போனும், சிம் கார்டும் வைத்திருந்தாகச் சொல்லி சொல் லியிருக்கிறார்கள். ஆனால், தன்னிடம் எந்த போனும் இல்லை என்றும் தனது அறையிலிருந்து எதையும் எடுத்துச் சொல் லவில்லை என்றும் அடித்துச சொல்கிறார் நளினி.

இவ்விவகாரத்தில் அரசியல் பிளஸ் அதிகார விளையாட்டுகள் அடங்கி இருக்கின்றன. சமீபத்தில் தமிழகம் வந்த பிரபாகரனின் தாயார் திருப்பி அனுப்பப்பட்ட செய்தியை திசை திருப்பவே நளினி மீது இப்படி

கடந்த வருடம் சாரதா என்கிற கைதியை கான்விக்ட் வார்டன்கள் சிலர் நிர்வாணப் படுத்தி அடித்து சித்தவதைப்படுத்தியதை நீதிமன்றம் மூலமாக உலகுக்குத் தெரியப் படுத்தி உரிய இழப்பீடு வாங்கிக் கொடுத்தார் நளினி. அதில் சிறை அதிகாரிகள் மீது துறை ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கவும் வழி வகுத்தார்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க கடந்த ஆறாம் திகதியும் 12ஆம் திகதியும் கறிக் கோழியில் ஆரம்பித்து கஞ்சா விற்பனை வரை பெண்கள் சிறையில் நடக்கும் சட்ட

பெண்கள் சிறை கண்காணிப்பாளரிடம் கேட்க முயற்சித்தபோது நளினியிடமிருந்து செல்போன் கைப்பற்றப்பட்டது குறித்து லோக்கல் ஸ்டேஷனில் புகார் எதுவும் கொடுக்கப்போவதில்லை.

சிறைத் துறை விதிகளின்படி நாங்களே நடவடிக்கை எடுத்துக்கொள்வோம் என்று மட்டும் சொன்னார்கள். அதன் பிறகு நளினியின் அறையில் சோதனையிடும்போது கிடைத்த செல்போனை மறைக்க அவர் முயற்சி செய்ததாகவும் அதிகாரிகளை


நளினி

விரோத செயல்களையும் அவற்றில் ஈடுபடும் பெண் அதிகாரி உதயகுமாரி உள்ளிட்ட பலர் குறித்தும் சிறைத் துறை ஏ.டி. ஜி.பி.க்கு இரண்டு கடிதங்களை எழுதி அனுப்பியிருக்கிறார்.

இதில் வெகுண்டுபோய் தப்பானவர்கள் ஒன்று சேர்ந்து அவரைக் கவிழ்க்க நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இதற்கு சிறை அதிகாரிகளின் முழு ஒத்துழைப்பும் இருக்கிறது என சொன்ன வழக்கறிஞர் புகழேந்தி மேற்கொண்டு விவரித்தது தான் பகீர் ரகம்.


நளினியை கொஞ்சம் கொஞ்சமாக சித்ரவதை செய்து மொத்தமாக சிறைக்குள்ளேயே கதையை முடிக்கும் திட்டத்தை புகாருக்குள்ளான சிறை ஊழியர்கள் சிலர்

பணி செய்ய விடாமல் தடுத்ததாகவும் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார்கள்.

நளினி ஏற்கனவே சிறைத் துறை உயரதிகாரிகளுக்கு எழுதி இருக்கும் கடிதத்தில் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும் இந்த சிறை என்னை பொறுத்த வரை கல்லறை என்று வருத்ததுடன் குறிப் பிட்டிருக்கிறாராம்.

உண்மையில் அவர் செல்போன் வைத்திருந்தாரா? சட்மன்றத்தில் பேசப்பட்து போல இரண்டு சிம்கார்டுகள் வைத்திருந்தாரா? என்பதை உறுதிப்படுத்துவது ஒன்றும் கடினமானதல்ல! யாருடனெல்லாம் யார் பேசினார்கள் என்பதை கண்டறிவதும் பெரிய காரியமில்லை! அதை ஆராய்ந்து

அவரது நன்னடத்தை ஆயுதத்துக்கு வேட்டு வைத்திருக்கிறது சிறைத் தரப்பு. தற்போது நளினியை சிறையில் சந்தித்து விட்டு வந்த அவரது வழக்கறிஞர்


நளினியின் கடிதம்

புகழேந்தியிடம் பேசினோம்.

வழக்கமாக அனைத்து கைதிகளும் காலை ஆறு மனிக்கு சிறை அறையிலிருந்து வெளியில் செல்ல அனுமதிக்கப் படுவர்.

ஆனால், செவ்வாயன்று காலை 10 மணி வரை எந்த கைதியையும் வெளியில் விடவே இல்லை. சிறை அதிகாரிகளும் கான்விக்ட் வார்டன்கள் சிலரும் நளினியின் அறைக்குள் சென்று சோதித்துவிட்டு வந்து சில மணி நேரத்தில் செல்போனும், சிம்கார்டும் கைப்பற்றினோம் என்று

யொரு திடீர் பழி சுமத்தப்பட்டிருக்கிறது.

மேலும், கடந்த 18 வருடங்களில் சிறையில் சட்டத்துக்குப் புறம்பாக எந்த செயலும் செய்யவில்லை என்கிற நன்னடத்தையோடு இருக்கும் நளினி அதன் மூலம் விடுதலையை எதிர்நோக்கியிருக்கும் வேளையில் இப்படிப்பட்டதொரு பொய்யான நாடகம் நடந்திருக்கிறது.

சிறையில் இருக்கும் அவர் கடந்த பல ஆண்டுகளாகவே சிறைக் கைதிகளின் மனித உரிமைகளுக்கு ஆதரவாகப் போராடி வருகிறார். பெண் கைதிகளுக்கு மாத விடாய் காலங்களில் சுகாதாரமற்ற நாப்கின்களை கொடுத்ததை எதிர்த்து தரமான நாப்கின்களை பெற்று தந்தார்.

அரங்கேற்றி வருகிறார்கள். அவரது உறவினர்களால் கொடுக்கப்படும் பழங்களை அழுக வைத்துக்கொடுப்பது , சாப்பாட்டை கேவலமான இடத்தில் வைத்து விட்டு எடுத்துத் தருவது என்றெல்லாம் அவருடைய உடல் நலத்துக்கு கேடு விளைவித்து வருகிறார்கள்.

இன்னொரு புறம் அவருக்கு எதிராக மற்ற கைதிகளை, தூண்டி விடுவது அவருடைய உடைகளைக் கிழிப்பது, அவருடைய பொருட்களை நாசம் செய்வது என்று மனரீதியான தொல்லைகளையும் கொடுத்து வருகின்றனர். இதையெல்லாம் விரிவாகவே நளினி ஏ.டி.ஜி.பி.க்கு எழுதிய கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.

இதற்கிடையில் அவருக்கு கொடுக்கப்படும் உணவில் ஏதாவது கலந்து கொடுத்து அவரது உயிருக்கு அபாயம் செய்து விடுவார்களோ என்கிற அச்சமும் எங்களுக்கு இருக்கிறது என்கிறார் புகழேந்தி.

இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து உடனே நாட்டுக்குச்சொல்ல வேண்டிய



புகழேந்தி

கடமை அரசுக்கு இருக்கிறது!

அப்போது தான் யார் முகம் எப்படிப் பட்டது என்று மக்கள் ஒரு முடிவுக்கு வர முடியும்! என்கிறார்கள் நடுநிலையான சிறை அதிகாரிகள்.

நன்றி:- ஜூனியர் விகடன்

# யாழ் மாவட்டத்தில் மலேரியாவை இல்லாதொழிப்போம்



சென்ற வருடம் இத்தினத்தில் யாழ் மாவட்டத்தில் மலேரியா நோயின் தாக்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்பொழுது 2010 ஏப்ரல் 25 ஆம் திகதி வரும் உலக மலேரியா தினத்தில் மலேரியாவை இல்லாதொழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கிறோம் என்பதை கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



யாழ்ப்பாணத்தின் மலேரியா நோய்நிலைமை அண்மைக்காலமாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனைக் கடந்த சில ஆண்டுகளில் இலங்கை மற்றும் யாழ்ப்பாணத்தில் மலேரியா நோயின் தாக்கம் தொடர்பான விபரங்களுடன் கீழே தரப்பட்டுள்ள புள்ளி விபர அட்டவணையிலிருந்து விளங்கிக் கொள்ள முடியும்.

| ஆண்டு | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இனங் காணப்பட்ட மலேரியா நோயாளர்களின் எண்ணிக்கை | 47,802 | 32,915 | 7,253 | 1,365 | 1,891 | 413 | 48 | 24 | 03 | 00 | 04 | 03 |

கடந்த ஆண்டுகளில் மலேரியா தடை இயக்கப் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் அத்துடன் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரது அயராத முயற்சியினாலும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் இந்த நிலைமையை அடைய முடிந்துள்ளது. இதற்கு அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


தற்போது யாழ் மாவட்டத்தில் மலேரியா கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இதை நாங்கள் நிரந்தரமாக்க வேண்டுமானால் திரும்பவும் மலேரியா ஒருவருக்கும் வராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாருக்காவது நோய் ஏற்பட்டால் உடனடியாக அவருக்கு பூரண சிகிச்சை அளிக்க வேண்டும். அத்துடன் அவரிடமிருந்து மற்றவர்களுக்கு பரவாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மலேரியா ஒருவருக்கு ஏற்பட்டால் முக்கிய அறிகுறி காய்ச்சலாகும். இது மலேரியாக இல்லை என்பதை இரத்தப் பரிசோதனை மூலம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். மலேரியா நோயை இல்லாதொழிப்பதற்கு நாங்கள் கண்காணிப்பதை நிறுத்தக்கூடாது.



ஒருவருக்கு மலேரியா ஏற்பட்டாலும் அவரிடமிருந்து பலருக்கு தொற்றும் வாய்ப்புள்ளது. இது நாங்கள் 1963 ஆம் ஆண்டு அனுபவபூர்வமாக அறிந்த உண்மை. ஆனபடியால் காய்ச்சல் நோயாளருக்கு இரத்தப் பரிசோதனை செய்வது மிக மிக அவசியம் என்பதை எல்லோரும் உணரவேண்டும். ஒரு மலேரியா நோயாளியையும் தகுந்த சிகிச்சை அளிக்காமல் தவறவிடக்கூடாது.



யாழ். மாவட்டத்தில் மலேரியா இல்லாவிட்டா லும் வெளிமாவட்டங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருபவர்களும் , வெளிமாவட்டங்களுக்கு, வெளிநாடுகளுக்கு சென்று திரும்புபவர்களும், மலேரியாவைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளது.

ஆனபடியால் எல்லோரும் விழிப்பாக இருக்க வேண்டும். முக்கியமாக சுகாதார ஊழியர்கள் எல்லோரும் இதையிட்டு விழிப்பாக இருக்க வேண்டும்.

வெளிநோயாளர்கள் பிரிவுகளிலும், உள்நோயாளர் பிரிவுகளிலும் உள்ள சகல காய்ச்சல் நோயாளர்களுக்கும் இரத்தப் பரிசோதனை செய்வது அவசியமென சுகதார திணைக்கள சுற்று நிருபத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது யாழ். மாவட்டத்தில் மலேரியா இல்லை என்ற கண்ணோட்டத்தில் பல வைத்தியர்கள் இரத்தப் பரிசோதனை செய்வதில் அக்கறை காட்டுவதில்லை என்பதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இப்போது சிலகாலம் மலேரியா இல்லாதிருக்கிறபடியால் மக்களிடையே மலேரியா தொற்றை எதிர்க்கும் சக்தி குறைந்து காணப்படும். தொற்று ஏற்பட்டால் சடுதியாக பலரை தாக்கக்கூடிய நிலை ஏற்படலாம். அத்துடன் பலருக்கு பரவலாம்.

அதனால் எல்லோரும் கவனிக்க வேண்டியது காய்ச்சல் நோயாளர்கள் எல்லோருக்கும் இரத்தப் பரிசோதனை செய்வது அவசியம். விசேடமாக வெளிமாவட்டம் சென்று திரும்பியவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் இரத்தப் பரிசோதனை மிக மிக அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்து செயற்பட்டால் மலேரியாவை தற்போது உள்ள கட்டுப்பாட்டு நிலையிலிருந்து இல்லாதொழிக்கும் நிலைக்கு கொண்டு வரலாம் என்பது திண்ணம்.

இதற்கு தனியாக சுகாதார திணைக்களம் மட்டும் செயற்பட்டால் போதாது. எல்லோருடைய பங்களிப்பும் மிகவும் அவசியமாகின்றது.

சென்ற பத்து வருடங்களாக மலேரியா தாக்கத்தினால் காணப்பட்ட வீழ்ச்சி மிகவும் உற்சாகமூட்டுவதாக உள்ளது. பெரியம்மை, இளம்பிள்ளைவாதம் ஆகியவற்றை இல்லாதொழித்தது மாதிரி எல்லோருமாக மலேரியாவையும் ஒழிப்பதற்கு முன்வர வேண்டும்.

வைத்திய கலாநிதி
**க. தா.சிவபாதம்**
(பிராந்திய மலேரியா தடை இயக்க வைத்திய அதிகாரி)
யாழ்ப்பாணம்.

### தீவக வலய வலயத்தில்

## சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி, தமிழ், சமூகக்கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், நடனம், சித்திரம், வர்த்தகம், முறைசாராக்கல்வி, இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்களுக்கான சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I அல்லது வகுப்பு 2-I உள்ளவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் குறிப்பிட்ட பாடத்தினை ஒரு பாடமாக கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு அப்பாடத்தில் 07 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் உள்ளவராகவும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது விண்ணப்பிக்கும் பாடத்தில் ஆசிரிய பயிற்சியை அப்பாடத்தில் பெற்றிருப்பதோடு 10 வருடங்களிற்கு குறையாத தரம் 06 – 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை தீவக கல்வி வலயத்தில் பெற்று மே மாதம் முதலாம் திகதிக்கு விண்ணப்பிக்கும்படி தீவக கல்விவலய பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உரிய திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் முறையான விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## பிறந்து மூன்று நாட்களேயான சிசு பற்றைக் காட்டிலிருந்து உயிருடன் மீட்பு

(கொழும்பு)

பிறந்து மூன்று நாட்களேயான பெண் சிசுவொன்று பற்றைக் காட்டில் தூக்கியெறியப்பட்ட நிலையில் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்ட சம்பவமொன்று செட்டிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனந்த குமாரசுவாமி நலன்புரி முகாமுக்கருகில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த சிசுவை மீட்ட பிரதேசவாசிகள் அதனை செட்டிக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

இந்நிலையில் அந்த சிசு செட்டிக்குளம் வைத்தியசாலையின் சிறுவர் பராமரிப்பு வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

கடந்த வியாழக்கிழமை மாலை குறித்த பற்றைக்காட்டுப் பகுதியில் சிசுவொன்றின் அழுகைக் குரலைக் கேட்ட பிரதேசவாசிகள் அப்பகுதியில் சோதனையிட்டுள்ளனர். இதன் போதே துணியால் சுற்றப்பட்டிருந்த நிலையில் குறித்த பச்சிளங் குழந்தை மீட்கப்பட்டுள்ளது.

பிரசவித்து மூன்றே நாட்களான நிலையிலேயே இந்த சிசு அவரது தாயாரால் காட்டில் தூக்கியெறியப்பட்டுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதனையடுத்து சிசுவை வைத்திய சோதனைக்கு உட்படுத்திய வைத்தியர்கள் அதன் உடல்நிலை சிறந்த முறையில் காணப்படுவதாக உறுதியளித்துள்ளனர்.

இருப்பினும் சிசுவைப் பிரசவித்த பெண் தொடர்பில் இதுவரையில் எவ்விதத் தகவல்களும் வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகள் செட்டிக்குளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (6)

# இத்தாலியில் கொல்லப்பட்டவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவர ஏற்பாடு

(கொழும்பு)

இத்தாலியில் கொலை செய்யப்பட்ட வவுனியா கற்குள்த்தைச் சேர்ந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்கு எடுத்து வரப்படுவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இத்தாலியில் பணிப்பெண்ணாக பணி புரிந்த 37 வயதுடைய பொன்னுச்சாமி விஜயலட்சுமி கடந்த 17ஆம் திகதி கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# இந்த ஆண்டில் எதிர்பார்த்ததை விட அதிக பொருளாதார வளர்ச்சி இருக்கும்

## மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

கடந்த சில வருடங்களாக இலங்கையில் போர் மேகங்கள் சூழ்ந்திருந்ததால் நாட்டின் பொருளாதாரம் 3.5 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததாகவும் இந்த ஆண்டு போர் முடிவுற்ற பின் அதில் 6.5 சதவீத வளர்ச்சி இருக்கும் என்றும் மத்திய வங்கி முன்னர் தகவல் வெளியிட்டிருந்தது.

ஆனால் நாட்டின் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுலா துறைகளில் நல்ல வளர்ச்சி தென்படுவதால் எதிர்பார்த்த 6.5 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச் சியை இந்த ஆண்டே காணலாம் என மத்திய வங்கி தற்போது அறிவித்துள்ளது.

இது குறித்து மத்திய ஆளுநர் கருத்துத் தெரிவிக்கையில், இந்த ஆண்டின் இரண்டாவது அரையாண்டிலேயே பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதம் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டதாகவும் ஆனால் தற்போது முதல் காலாண்டு முடிவிலேயே பொருளாதார வளர்ச் சியில் நிச்சயமான நல்ல அறிகுறிகள் தென்படுவதால் ஆண்டு இறுதியில் இந்த சதவீதம் இன்னும் சிறிது அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறியுள்ளார்.

நாட்டின் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சுற்றுலா துறைகளில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்பார்க்கப்பட்ட அளவை விட அதிகமாவதற்கு தூண்டுகோலாய் அமைந்துவிட்டதாக கூறிய அவர் வளர்ச்சி சதவீதம் குறித்து சரியான மதிப்பீடுகள் நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக பொருளாதாரம் மிக குறைந்த சதவீதத்தில் இருந்த போதும் மத்திய வங்கிதனது கொள்கைகளில் மாற்றங்களைசெய்யவில்லை என்றும் இந்த ஆண்டு மே மாதம்மிகவேகமான பொருளாதார வளர்ச்சி இருக்குமென எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (6)


சிவமயம்

**சைவக்குருமணிகள் பயிற்சிக்கல்லூரி**

யாழ்ப்பாணம் – இலங்கை

**சான்றிதழ் வழங்கும் வைபவம் -2010**

இடம்:– அர்ச்சகர்சபைமண்டபம், திருநெல் வேலி.

காலம்:– 25.04.2010 ஞாயிற்றுக் கிழமை மாலை 2.30 மணி

தலைவர்:– சிவஸ்ரீ.ச.மகாலிங்கசிவக்குருக்கள்– கல்லூரி அதிபர்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(1256) கல்லூரிச் சமூகம்.



**தந்தை செல்வநாயகம்**

**33ஆவது நினைவுநாள்**



**அஞ்சலி நிகழ்ச்சி**

காலம்: 26.04.2010 திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி

இடம்: தந்தை செல்வா நினைவிடம் தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

தலைவர்: அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள் (தலைவர், தந்தை செல்வா நினைவுஅறங்காவற்குழு)

**சர்வமத பிரார்த்தனை**

வரவேற்புரை: பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள் (செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

அஞ்சலியுரை:
- மௌலவி எம்.ஐ.மஹமூத் ஆலிம்
- வண.பிதா அ.பி.ஜெயசேகரம் அடிகள்
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

நன்றி: திரு.பெ.கனகசபாபதி (தந்தை செல்வா அறங்காவற்குழு உறுப்பினர்)

தமிழ்த் தேசியத்தின் தந்தை அவர்களை நினைந்து இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் 11.04.2010

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு


# மு.கா.தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவி சுழற்சி முறையில்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி சுழற்சி அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைத்துள்ள இரண்டு ஆசனங்களில் ஒன்று கிழக்கிலும் மற்றையது மேல் மாகாணத்திலும் சுழற்சி அடிப்படையில் பகிரப்படும் என தெரியவருகின்றது.

தற்பொழுது களுத்துறை மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவி எதிர்காலத்தில் கொழும்பு, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்கும் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அட்டாளைச்சேனை, ஓட்டமாவடி, மூதூர் ஆகிய பிரதேசங்களுக்கும் பகிரப்படும்.

இது சம்பந்தமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசனலி தெரிவிக்கையில்,

முதற்கட்டமாக கட்சியின் சிரேஷ்டத்துவம் மற்றும் கட்சிக்கு மிக நம்பிக்கைக்குரியவர்கள் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் கட்சியின் உயர் பீடம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிக் கொள்ளும் போது தாங்கள் இருவரும் இராஜினாமாச் செய்ய தயார் என்றார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக தேசிய பட்டயலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த தனக்கு தேசிய பட்டியல் நாடாளு மன்ற உறுப்பினர் பதவி மிக விரைவில் வழங்குவதாக கட்சித் தலைமைத்துவம் தனக்கு உறுதியளித்திருப்பதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். (6)

# ஐரோப்பிய நாடுகளுக்கான விமான போக்குவரத்து வழமைக்கு திரும்பியது

ஐஸ்லாந்தில் ஏற்பட்ட எரிமலைக் குமுறலினால் எழுந்த சாம்பற் புகை மண்டலம் காரணமாக தடைப்பட்ட விமானப் போக்குவரத்து நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இதனை அடுத்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிறைந்து வழிவதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிமலைக் குமுறலினால் தொடர்ந்து பாதிக்கப்பட்டிருந்த விமான சேவைகளை வழமைக்குக் கொண்டுவர ஐரோப்பிய நாடுகள் கடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தன. இந்தப் பிரச்சினை காரணமாக 95 ஆயிரம் விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

பண்டாரநாயக்க சர்வதேச விமான சேவை நிலையம் வழமைபோல் தமது சேவைகளைத் தொடர்வதாக விமான சேவைகள் தலைமை அதிகாரி எச்.எஸ். ஹெட்டியாரச்சி கூறினார்.

ரோம் மற்றும் லண்டன் போன்ற நாடுகளுக்கு விமான சேவைகள் இடம்பெறுவதாக அவர் கூறினார். (6-3)


கோடை காலத்தில் ஒரு குளிர்மையான விற்பனை

**NALIN இன் காட்சியறையில் உங்களுக்காக எங்கள் கணனிகள்**

கணனி; கணனி உதிரிப்பாகங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

அனைத்து கணனிகளும் மூன்று வருட உத்தர வாதத்துடன் விசேட விலைகளில்

**Slim Top(Branded)**
- 1.6 GHZ
- Intel Atom
- 1GB(800Mhz) Kingston
- 160GB Sumsung Hdd
- Mini Tower Casing
- DVD Writer
- Key,Mouse
- 16 AOC LCD

38,000/=

**DUAL SERIES**
- Intel 2.7 Dual Core
- Asus G31 Mother Board
- 250GB Samsung HDD
- 1GB Kingston(800) memory
- 24X Samsung DVD Writer
- Power Logic Casing
- Multi Language Key Board
- Optical Mouse
- MM Speaker
- 19' LG/19 AOC/ 17' DELL LCD
- UPS 650w
- Computer Table (Black)

51,800/=

**CORE 2 DUO SERIES**
- Intel 2.93.C.2 Duo
- Asus G31 M Board
- 1GB Kington(800) Memory
- 500 GB Samsung HDD
- 24X Samsung DVD Writer
- 19' LG/19 AOC/17 DELL LCD
- Power Logic Casing
- KeyBoard,Mouse
- MM Speaker

53,800/=

MONITOR
16' AOPEN LED -13, 800/=
16" VIEW SONIC(LED) - 14,850/=
16' ASUS - 14,600/=
16' SAMSUNG - 14,500/=
16" AOC - 12,650/=
17' DELL - 15,400/=
19" ASUS - 18,000/=
19" LCD LG - 15,500/=
19,AOC - 15,750/=

M.B
Intel G31 - 7,300/=
ASUS G31 - 5,800/=
ASUS G41 - 7,600/=
ASROCK G31 - 5.500/=
FOXCONN G31 - 5,700/=
ATOM Intel - 8,600/=

Memory
1GB KINGSON - 4,100/=
2GB KINGSTON - 7,500/=
2GB TRANSEND - 8,000/=

CASING
Power Logic - 3,000 - 9,000
12 MODELS

DVD Writer
24 SAMSUNG - 3,400/=
24X LITE ON - 3,900/=
LITE EXTERNOL - 8,750/=

PROCESSOR
2.7 DUAL (BOX) - 8,700/=
2.93 C.2 DUO - 14,750/=

HDD
500GB SAMSUNG - 7,250/=
250GB SEAGATE - 5,600/=
40GB WD - 2,850/=

SCANNER
SCANJET 2410 -7,600/=

RECOVERY CARD - 675 - 1600

FLASH DRIVE - 1200 - 3000

PRINTER
HP 1660 - 4,800/=
HP 1215(colour lase) - 42,000/=
HP 31N1(F2180) - 12,500/=
CANON 2900 LASER - 16,200/=
LQ 300 + - 22,500/=

UPS
1KV TRIGGGER AUTO - 8,800/=
LUMINOUS VISTA 650 - 4,600/=
APC UPS (Branded) - 5,800/=

ROUTERS
ADSL/BROAD BAND
1/4/5/8 PORT - TP LINK/ DLINK/BELKIN
USB wireless stick 3300 - 5000
Cable - AMP/MAX - 4500 - 7500

HSDPA DONGLE 7,250/= - 9,500/=

**LAP TOP Rs.52,000/= - 2,34000/=**

கணனி திருத்த வேலைகள் உங்கள் இல்லங்களிற்கு வந்து செய்து தரப்படும் 450/= மட்டுமே

195/4 parameswara junction
TP : 0212221166 , 0777667974

NALIN Information Technologies Pvt Ltd

# தமிழர்களைக் கடத்தி கப்பம்கோரும் அவலம் இந்தியாவிலும் தொடர்கிறது

(சென்னை)

இலங்கையில் தமிழர்களைக் கடத்தி கப்பம் கோரும் அவலம் வடகிழக்கில் தொடரும் நிலையில் இந்தியாவிலும் இலங்கைத் தமிழர்களை இனங்கண்டு கடத்தி கப்பம் கோரும் அவலம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்னை நீலாங்கரை பிரதேசத்தில் வசித்து வந்த தமிழ் இளைஞர் ஒருவரை கடத்தி 2 இலட்சம் ரூபா கப்பமாக கோரப்பட்டுள்ளமை தொடர்பாக இலங்கையர் இருவர் உட்பட4 பேர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

32 வயதான ஜெயமோகன் கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் தனது மனைவியான 30 வயதுடைய கிறிஸ்ரியானா சோபியா மற்றும் அவரது 2 வயதுப் பெண்குழந்தையான கனிமொழி சகிதம் இலங்கையிலிருந்து இந்தியா சென்று சென்ன்ன நீலாங்கரை சீ.எம்.பி.நகரில் வசித்து வந்தனர்.

நேற்றுமுன்தினம் அவருக்கு விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது குறித்துவிசாரிக்க வேண்டும் என வீட்டுக்கு வந்த 3 ஆசாமிகள் தம்மை இந்தியப் புலனாய்வுத் துறையினர் எனத் தெரிவித்து இவரை அழைத்துச் சென்று பின்னர் அவரது மனைவியிடம் 2 இலட்சம் ரூபா கப்பப் பணம் கோரியுள்ளனர்.

இதனையடுத்து இவரது மனைவி அவரது நண்பர் ஊடாக பொலிஸாருக்கு முறையிட்டதனைத் தொடர்ந்து குறித்த நபர்கள் பயன்படுத்திய கைத்தொலைபேசி ஊடாக அழைப்பை மேற்கொண்டு தமிழகத்தின் கரைக் கிராமமான மாமல்லபுரம் எனும் இடத்திலிருந்து இலங்கையைச் சேர்ந்த இருவர் மற்றும் தமிழக கூலிப்படையைச் சேர்ந்த இருவர் உட்பட நால்வரைக் கைது செய்ததுடன் ஜெயமோகனும் மீட்கப்பட்டுள் ளார் என தமிழக செய்திகள் தெரிவிக் கின்றன. குறித்த கடத்தல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# தமிழக முதல்வருக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம்

## வழக்கறிஞர்கள் எச்சரிக்கை

(சென்னை)

சென்னையில் கருணாநிதி திறந்து வைக்கவுள்ள அம்பேத்கார் சிலைக்கு ஆரம்ப நிலையிலேயே எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. அவர் சென்னை உயர் நீதிமன்றத்திற்குள்ளேயே வரக்கூடாது எனவும் வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு வழக்கறிஞர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்கள் அதிகரித்ததனை அடுத்து அதிகமான வழக்கறிஞர்கள் தாக்கப்பட்டனர். மேலும் அவர்களது பல வாகனங்களும் அடித்து சேதமாக்கப்பட்டன.

இதுகுறித்த வழக்கில் பொலிஸார் மீது தமிழக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததனால் வழக்கறிஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவி வந்தது. இந்த நிலையில் இலங்கை விவகாரங்கள், நளினி விவகாரம் மற்றும் பார்வதி அம்மாள் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரங்களிலும் வழக்கறிஞர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்காரின் திரு உருவ சிலையைத் திறந்து வைப்பதற்கு கருணாநிதி செல்லவுள்ளார். அவரை வரக்கூடாது எனத் தெரிவித்து வழக்கறிஞர்களின் வேறு தரப்பினரும் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

மேலும் கருணாநிதி வரும் வேளையில் தாங்கள் கறுப்புக்கொடியைக் காட்ட உள்ளதாகவும் வழக்கறிஞர்கள் தெரிவித்திருக்கின்றனர். (6)

# தமிழகத்தில் வெயில் கொளுத்துகிறது

(சென்னை)

மதுரை, கோவை, திருச்சி ,சேலம், வேலூர், பாளையங்கோட்டையில் 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தியது. தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் வெயில் வறுத்தெடுத்து வருகிறது.

குறிப்பாக உள்மாவட்டங்களில், வெயில் கடுமையாக இருக்கிறது. கடலோர மாவட்டங்களில், கடல் காற்று வீசுவதால் வெப்பத்தின் தாக்கம் சற்றுக்குறைவாக உள்ளது. சென்னை நகரைவிட,புறநகர்ப் பகுதியில் வெப்பநிலை எப்போது அதிகமாக இருக்கிறது. நேற்று முன்தின் புறநகர்ப்பகுதியல் 98 டிகிரி பாரன் ஹீட் அளவு வெயியில் பதிவாகியது.

அதிகபட்சமாக, திருச்சியில் 104 டிகிரி பாரன் ஹீட் அளவு வெப்பநிலை பதிவாகியது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். (6)

## கைது செய்யப்பட்ட ஈழத்தமிழர்களை

# மலேசியாவில் தங்கவைக்க தமிழக, இந்திய அரசுகள் வற்புறுத்த வேண்டும் - திருமாவளவன்



கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்களை மலேசியாவிலேயே தங்க வைக்க த மி ழ க , இந்திய அரசுகள் வற்புறுத்த வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் மலேசியா தூதரகத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மலேசியாவில் ஈழத்தமிழர்கள் மொத்தம் 75 பேர் பினாங்கு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழக அரசும், இந்திய அரசும் உடனடியாக இதில் தலையிட்டு அவர்களை மலேசியாவிலேயே தங்கச் செய்வதற்கு மலேசிய அரசை வற்புறுத்த வேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

அவர்கள் அனைவரும் ஆனந்தகுமாரசாமி முகாம் மற்றும் அருணாசலம் முகாம் ஆகிய முகாம்களிலிருந்து வன்னிப் பகுதிக்கு மீள் குடியேற்றம் செய்வதற்காக அனுப்பப்பட்டவர்கள் எனத் தெரிகிறது. விடுவிக்கப்பட்டார்கள் என்றாலும் மீள்குடியேற்றத்திற்கான எத்தகைய அடிப்படை வசதியும் இல்லாத நிலையில் விடப்பட்டிருக்கிறார்கள்.

அவரவர் சொந்தக் கிராமங்களுக்கு சென்று குடியேறுவதற்கு அங்கே கிராமங்களுமில்லை. கிராமங்கள் இருந்ததற்கான வடுக்களும் இல்லை.

அங்கே ஒரு குடிசை அமைத்து முடங்கிக் கொள்ளலாம் என்று எண்ணுவதற்குக் கூட இயலாத நிலை உள்ளது. இத்தகைய பாதுகாப்பற்ற சூழலில் எங்கோ ஒரு தேசத்தில் அகதிகளாய் அடைக்கலம் ஆகலாம் என்னும் மனநிலைக்கு அம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் கடந்த 19.04.2010 அன்று ஒரு படகின் மூலம் பெண்கள், குழந்தைகள் உட்பட 75 பேர் மலேசியாவை நோக்கிப் பயணம் செய்துள்ளனர். உயிர் பிழைத்தால் போதும் என்னும் மனநிலையில் அயல் நாட்டாரின் கருணை கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் அவர்கள் பயணித்துள்ளனர்.

எந்தப் பாதுகாப்பும் இல்லாத சூழலில் அவர்கள் பயணம் செய்த படகு பழுதாகி பாதியிலேயே நின்று போயுள்ளது.

அது ஒரு சாதாரண படகு என்பதனால் எந்த நேரத்திலும் கடலில் மூழ்கலாம் என்கிற ஆபத்து இருந்தது. இந்த நிலையில் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென அவர்கள் நடுக்கடலில் இருந்தபடியே உலக நாடுகளில் வாழும் நண்பர்கள், உறவினர்கள் மூலம் கோரிக்கை வைத்து கதறியிருக்கின்றனர். கடந்த 23.04.2010 அன்று விடுதலைச் சிறுத்தைகளுக்கும் இத் தகவல் எட்டியது.

அதனடிப்படையில் அவர்களைத் தொடர்பு கொண்டு பேசியதுடன் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் ஆறுதல்படுத்தி யிருக்கிறோம்.

அத்துடன் அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து அவர்களை பாதுகாப்பாக வைப்பதற்கு உதவ வேண்டுமென மலேசியாவைச் சேர்ந்த அமைப்புக்களைத் தொடர்பு கொண்டு வேண்டுகோள் வைத்தோம்.

தற்போது அவர்களைக் கைது செய்துள்ள மலேசிய அரசு அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவிடுவார்களோ என்கிற பேரச்சம் உலகத் தமிழ்களிடையே ஏற்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை கருணை உள்ளத்தோடு அகதிகளாய் ஏற்று அடைக்கலம் அளிக்கவேண்டும்.மாறாக, இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால் அது ஈவிரக்கமற்ற கொடுஞ்செயலாக அமையும்.

எனவே தமிழக அரசும், இந்திய அரசும் உடனடியாக இதில் தலையிட்டு அவர்களை மலேசியாவிலேயே தங்கச் செய்வதற்கு மலேசிய அரசை வற்புறுத்த வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இது தொடர்பான கோரிக்கை விண்ணப்பத்தினை விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் தமிழகத்திலுள்ள மலேசியத் தூதரகத்தில் சமர்ப்பிக்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

பாராட்டி வாழ்த்துகிறோம்

23.04.2010 அன்று
கௌரவ ஜனாதி
பதி முன்
னிலையில்
பாரம்பரிய
கைத்தொழில்துறை
சிறுகைத்
தொழில் முயற்சி
அபிவிருத்தி ·
அமைச்சராகப்
பதவிப் பிரமானம்
செய்து கொண்ட



K.N. டக்ளஸ் தேவானந்தா
(செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி)
அவர்கள் லிங்க விநாயகர் அருள்பெற்று
மேலும் பல பதவிகள் பெற்று
அரசியல் பணி தொடர
வாழ்த்துகிறோம்.

பா.கேசவன் ஐயா
லிங்க விநாயகர் தேவஸ்தானம்.
இருபாலை.

# உலகின் முதலாவது முழு முகமாற்று அறுவை சிகிச்சை வெற்றியளித்துள்ளது

உலகின் முதலாவது முழு முகமாற்று அறுவை சிகிச்சை வெற்றியளித்துள்ளதாக ஸ்பெயின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 30 சத்திர சிகிச்சை நிபுணர்களினால் இந்த விசேட சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முழுவதுமாக சிதைவடைந்த முகமொன்றுக்கு பதிலாக மற்றுமொரு நபரின் முகமொன்றின் பாகங்கள் பொருத்தி இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் முழுவதுமாக குறித்த நபரின் முகம், தாடை , மூக்கு,முகத் தோல், உதடுகள் மற்றும் பற்கள் உள்ளிட்ட பூரண முகப் பகுதியும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகமாற்று அறுவைச் சிகிச்சை 22 மணித்தியாலங்கள் நடைபெற்றது. இதற்கு முன்னர் பத்து முகமாற்று அறுவைச் சிகிச்சைகள் உலகில் இடம்பெற்ற போதிலும் இந்த அளவிற்கு மிகவும் சிக்கல் மிகுந்த முழு முகமாற்று அறுவை சிகிச்சையொன்று இது வரையில் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டினால் குறித்த நபர் காயமடைந்ததாகவும் இதற்கு முன்னர் ஒன்பது தடவைகள் நடத்தப்பட்ட சத்திரசிகிச்சைகள் பலனளிக்கவில்லை எனவும் சுவாசித்தல் , உணவு உண்ணல், பேசுதல் போன்ற பல்வேறு அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது குறித்த நபர் அவதியுற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)

கோபத்தோடு எழுபவன் துக்கத்தோடு தான் கீழே இருப்பான்.

-ஓர் அறிஞர்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இரா. சம்பந்தனுக்கு ஓர் அன்பு மடல்

அன்புமிகு சம்பந்தன் ஐயாவுக்கு அநேக வணக்கம்.

அண்ணன் மாவை சேனாதிராசாவுக்கு எழுதிய கடிதத்திற்கு முன்னதாக உங்களுக்கு கடிதம் எழுத வேண்டும் என்பதே விருப்பம்.

இருந்தும் யாழ். மாவட்டத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் சில கருத்துக்களை தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தமையால் மாவைக்கு முதலில் கடிதம் எழுதினோம்.

கடிதங்கள் எழுதும் பணி நிறையவே இருப்பதால் முன்பின் என்ற பாகுபாட்டுடன் இக் கடிதத்தை நோக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

தமிழ் மக்களின் மூத்த அரசியல் தலைவர் தாங்கள். நாடாளுமன்ற அனுபவமும் அரசியல் அனுபவமும் நிறையவே உண்டு.

தங்களின் அரசியல் முதிர்ச்சிக்கு ஈடாக இருக்கக் கூடிய அரசியல்வாதியொருவர் இருப்பாராயின் அது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரியாகவே இருக்க முடியும்.

எனினும் தமிழ்த் தரப்பின் இரண்டு பழுத்த அரசியல் தலைவர்கள் ஒன்றாக–ஒற்றுமையாக இருக்க முடியாமல் போனமை துரதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்.

இருந்தும் தமிழ்த் தரப்புகள் எங்காவது, எப்போதாவது ஒற்றுமைப்பட்டதுண்டா என்று யாரேனும் கேள்வி எழுப்பினால், தலைகுனிவதை விட வேறு வழியேதும் இல்லை.

என்ன செய்ய முடியும்? மூவேந்தர் காலந் தொட்டு ஒற்றுமையீனத்தின் டி.என்.ஏ. கூறுகள் எங்கள் உதிரங்களில் சீறிப்பாய்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

இது தொடர்பில்தான் இக் கடிதத்தை தங்களுக்கு எழுத எண்ணினேன்.

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் பாடல் பெற்ற தலம். அந்த மண்ணில் பிறந்த தங்களுக்கு கோணேச்சரத்தானை திருமுறையால் பாடிப்பணிந்த திருஞானசம்பந்தரின் நாமம் சூட்டப்பட்டது பெருமைக்குரியது.

பிறந்த பதியாலும், நாமத்தாலும், அரசியல் அனுபவத்தாலும் பெருமைக்குரிய தாங்கள் இப்போது அதிரடிக் கோபம் கொள்வதாக அறிந்து மனம்நொந்து கொண்டோம்.

'கோபம்' உணர்வுகளில் ஒன்று. சில இடங்களில் அது தேவையானதும் கூட.

இருந்தும் உங்களின் 'சுயகோபம்' தமிழ் அரசியலில் ஒற்றுமையைக் குலைக்குமாக இருந்தால் தமிழர் நலன் கருதி கோபம் தணிப்பது உத்தமம்.

அதேநேரம் தமிழ் அரசியலின் மூத்த தலைவராக இருக்கும் நீங்கள் தமிழ் அரசியல் தரப்புகளை ஒற்றுமைப்படுத்தும் பணியையும் செய்ய வேண்டும் என விநயமாக வேண்டி நிற்கிறோம்.

கடந்த பொதுத் தேர்தலில் நடந்த பிரிபாடலை மறந்து அத்தனை பேரையும் ஒன்று சேருங்கள்; ஒற்றுமைப்படுத்துங்கள். எவரையும் புறந்தள்ளாதீர்கள்.

அரசுடன் இணைந்து செயற்படுவது என்ற முடிபை எடுத்த தங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனோ, வீ. ஆனந்தசங்கரியுடனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்டவர்களுடனோ, சிவாஜிலிங்கம் சார்ந்தவர்களுடனோ ஒற்றுமைப்படுவது கடினமான காரியமல்ல.

எனவே தயவு செய்து தமிழ் அரசியல் தரப்புகளை ஒன்று சேருங்கள். விமர்சனங்களை ஒதுக்கி விடுங்கள்.

எல்லாம் இழந்து துன்புறும் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்க ஒன்றுபடுங்கள். இது விடயத்தில் உங்கள் முடிபை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றோம்.

தங்கள் பதில் கிடைக்காவிடினும் பதில் எழுதும் எங்கள் பண்பாடு தொடரும்.

நன்றி

# விமல் வீரவன்ஸவிடம் இரகசியம் பேசிய ஜனாதிபதி

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நிர்மாணம் பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது சேவைகள் அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரிடம் ஏதோ இரகசியமாக கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய அமைச்சரவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னணியில் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது.

இதன்பேரதே அமைச்சர் விமல் வீரவன்ஸவிடம் ஜனாதிபதி ஏதோ இரகசியமாக கூறினார். இதனை இங்கிருந்த சகலரும் கூர்மையாக அவதானித்து கொண்டிருந்தனர். எனினும் ஜனாதிபதி அவரிடம் என்ன? கூறினார் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

இதேவேளை ஊடகத்துறை பிரதியமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொள்வதற்கு முன்னர் மேர்வின் சில்வா தனது இடது கையிலிருந்த காயத்தை காண்பித்தார். இந்த காயம் கட்சியினதும் நாட்டினதும் தலைமைக்காகவே ஏற்பட்டது என்றும் கூறினார். இதனால் அங்கு சிரிப்பொலி எழுந்தது.

(ந)

# அமைச்சரவைப் பொறுப்பு வழங்கல் ஸ்ரீ.சு.கட்சி உறுப்பினர்கள் அதிருப்தி

(கொழும்பு)

அமைச்சரவை நியமனத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் ஒதுக்கப்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து, சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பீ.தயாரத்ன, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன, மகிந்த சமரசிங்க, ராஜித சேனாரத்ன போன்ற முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு முக்கியமான அமைச்சு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி போன்ற சிரேஷ்ட அமைச்சர்களுக்கு முக்கியத்துவமற்ற அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோல் பிரதியமைச்சர்கள் பலரும் தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் குறித்து அதிருப்தியடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அமைச்சுக்களுக்குரிய துறைகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர் இந்த நிலைமை மேலும் மோசமடையும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# இந்தியத் திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக்கூடாது

## வைகோ தெரிவிப்பு



(சென்னை)

சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவை இலங்கையில் நடத்தக் கூடாது என்று ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலட்சக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவை இலங்கைத் தலைநகர் கொழும்பில் நடத்த அந்த அமைப்பின் விளம்பரத் தூதர், நடிகர் அமிதாப்பச்சன் ஏற்பாடு செய்து வருவது வருத்தமளிக்கிறது.


அமிதாப் உடனடியாக தனது முயற்சியைக் கைவிட வேண்டும். மும்பையில் தாக்குதல் நடத்திய பாகிஸ்தனியர்களின் தலைநகராம் இஸ்லாமாபாத்தில் அவர் இத்தகைய விழாவை நடத்தத் தயாரா? அவ்வாறு அறிவித்துவிட்டு அவர் மும்பையில் நடமாட முடியுமா?

தமிழகத் திரைப்படத் துறையைச் சேர்ந்த யாரும் அந்த விழாவில் கலந்து கொள்ளக் கூடாது.

மேலும் அந்த விழாவை இரத்து செய்ய வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த திரைப்படத் துறையினர் வெளிப்படையாக கோரிக்கை விட வேண்டும். அமிதாப்பச்சன் தனது விழா நடவடிக்கைகளை கைவிட தமிழக திரைத்துறையினர் வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு வைகோ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (6)

# மீட்பு யாருக்கு?



சோர்வு இல்லாத ஊக்கமுடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவனுடைய இடத்திற்கு வழிகேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

ஆம், இந்த நவீன கணனி உலகத்தில் ஒவ்வொருவரும் எளிதாக , விரைவாக சம்பாதிக்க வேண்டும், பொருட்களைச் சேர்க்க வேண்டும் என்று துடிக்கின்றோம். அதேபோல் , ஆன்மீக வாழ்விலும் மீட்பை சம்பாதிக்க வேண்டும் என்றால் வெறும் ஆசை மட்டும் இருந்தால் போதாது. மாறாக அதை அடைய வேண்டி அதற்கான கடின முயற்சியில் ஈடுபட வேண்டும் .கடின முயற்சி இல்லையேல் மீட்பை நாம் பெற முடியாது.

இன்றைய நற்செய்தியில் முதல் வாசகத்தில் இதைப் பற்றியே பார்க்கின்றோம். அதாவது இங்கு ஆண்டவரின் மீட்பு புறவினத்து மக்களுக்கு , பாவிகளுக்கு போய்ச் சேர்ந்தது. காரணம் அவர்களிடம் ஆணவம் இல்லை, ஏற்றுக்கொள்கின்ற தன்மை இருந்தது. சோம்பல் இல்லை, விடா முயற்சி இருந்தது. சட்டத்தை அல்ல; இறை நம்பிக்கையையே வாழ்ந்து காட்டினார்கள்.

## பரமபிதா காட்டிய பாதை

இங்கு மீட்பை அடையும் வழிகளாக திறந்த மனம்,ஏற்றுக்கொள்ளுகின்ற பக்குவம், சட்டத்தின் வழி அல்ல; இறை நம்பிக்கை ஒன்றே வழி. காரணம் சட்டம் தருவது சாவு ,தண்டனை; நம்பிக்கைத் தருவது வாழ்வு,பரிசு; முன் குறித்து வைக்கப்பட்டதால் அல்ல ; முயற்சியுடன் கடினமாக உழைப்பதாலே ஆகும்.

மேலும் மீட்பை அளிப்பவர் யார் என்று பார்க்கும் போது போரிடுபவர்தான் வெற்றியைத் தரமுடியும்; அதுபோல மீட்புக்காக உயிரைக் கொடுத்தவர் தான் மீட்பைத் தரமுடியும். அவர் தான் மீட்பர் மெசியா இவரைத் தான் இன்றைய நற்செய்தி வாசகமும் இரண்டாம் வாசகமும் நல்ல ஆயர் என்று சொல்லுகிறது.

ஆம், நல்ல ஆயர் தன் ஆடு களின் வளர்ச்சியிலே, மகிழ்ச் சியிலே அக்கறை எடுப்பான். அவைகளின் பசியைப் போக்க பசுமையான புல்வெளிக்கும் தாகத்தைத் தீர்க்க குளிர்ச்சியான நீரோடைக்கும் அழைத்துச் செல்வான்.

இயேசுவும் இன்றைய நற்செய்தியில் நல்ல ஆயர் நானே நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தன் உயிரைக் கொடுப்பர் என்று கூறுகின்றார். மீட்பு பெற்றவர்கள் நிலையை பார்க்கும் போது போரில் நிலையை பார்க்கும் போது போரில் வெற்றி பெற்றவனுக்கு, தேர்வில் வெற்றி பெற்றவனுக்கு, நோயினின்று குணம் பெற்றவனுக்கு, கிடைக்கும் மகிழ்ச்சியே மீட்பு பெற்றவர்களுக்கும் உண்டாகும். இதைக் கேட்ட பிறகு இனத்தார் ஆண்டவரின் வார்த்தையைப் போற்றிப் புகழ்ந்தனர்.

ஆம், நாமும் மீட்பைப் பெற வேண்டுமா? நல்ல ஆயன் நம் ஆண்டவரை நம்புவோம்,அவரையே பின் பற்றுவோம். அதேவேளையில் மீட்பை நமதாக்கிக் கொள்ள கடின முயற்சி எடுப்போம். முயற்சி இன்றி முன்னேற்றம் இல்லை; உழைப்பின்றி உயிர்ப்பில்லை.

ஜோன் ரொபேர்ட்

# தமிழர்தாயக கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் கட்சிகள் தடைசெய்யப்படும்

## திவயின செய்தி

(கொழும்பு)

தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் செயற்படும் அரசியல் கட்சிகளை முற்றாக தடை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு வருவதுடன் தமிழர் தாயகக் கோட்பாட்டுடன் செயற்படும் இரண்டு கட்சிகளை அடையாளம் கண்டுள்ளதாகவும் திவயின தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கொண்டுவர எண்ணியுள்ள சட்டத்தின் பிரகாரம் எந்த கட்சியேனும் நாட்டை பிளவுபடுத்த முயற்சித்தால் அந்த கட்சியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் முடக்கப்படும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு தமிழர்களின் பூர்வீக தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாதொழித்து தமிழ் பேசும் மக்களின் நியாயப் பூர்வமான உரிமைகளை மறுப்பதற்கான முனைப்புக்களையே சுதந்திரத்திற்கு பின்னர் ஆட்சி செய்ய பெரும்பான்மையாக கொண்ட அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)

# மாகாண சபை வெற்றிடங்கள் தொடர்பில் அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் பணிப்புரை

(கொழும்பு)

மாகாண சபைகளில் காணப்படும் உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க மாகாண சபைப் பொதுச் செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேல் மாகாணம், வடமேல் மாகாணம் ஆகியவற்றின் பொது செயலாளர்களுக்கு இவ்விடயம் தொடர்பில் ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது மாகாண சபைகளிலிருந்து 39 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகியிருந்தனர்.

நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்களுள் 8 மாகாணசபை அமைச்சர்களும் 3 மாகாண சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்களும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# நளினி-முருகன் சந்திப்பு

(கொழும்பு)

நளினியிடம் கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டு விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்றுக் காலை வேலூர் சிறையில் நளினி - முருகன் இருவரும் சந்தித்து பேசினர்.

டி.எஸ்.பி.கருணாகரன் ஆண்கள் சிறையில் இருந்து பெண் சிறைக்கு முருகனை அழைத்து சென்றார்.

முன்னதாக முருகனை பலத்த சோதனைக்கு பின்னரே அழைத்து செல்ல ஏற்பாடு செய்தனர்.

பின்னர் நளினி முருகன் இருவரும் தனியாக சந்தித்து பேசினர். தொலைபேசி வழக்கு விசாரணை நடந்து வரும் பரபரப்பான சூழ்நிலையில் நளினி முருகன் சந்திப்பு சிறை வட்டாரத்தில் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

வழக்குகளை சட்டரீதியாக எப்படி சந்திப்பு என்பது குறித்து இருவரும் பேசிக்கொள்ள அதிக வாய்ப்புகள் இருப்பதாக சிறைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின்

# தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கிய போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

**கட்டுரைப் போட்டி - கனிஷ்டபிரிவு**

பா. வக்சலா (யா/ நவாலி மகா வித்தியாலயம்), றெ. சிந்துஜா (யா/ இளவாலை கன்னியர்மடம் ம.வி), தே. ஜீவிதா (யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை).

**கட்டுரைப் போட்டி - சிரேஷ்ட பிரிவு**

ந. துஸாந்தி (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ச. ஜெயராணி (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை), ம. யோஸ்லன் (யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை).

**கவிதைப் போட்டி - கனிஸ்ட பிரிவு**

ட. சுகன்ஜா (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), ப. யூலியா (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை), பா. பாலாஜினி (யா/பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசா।।லைல்).

**கவிதைப் போட்டி - சிரேஷ்ட பிரிவு**

சே. கோபிகா (யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ம. கார்த்திகா (யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), நீ. சுகேனியா (யா/ பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க. த.க. பாடசாலை).

**சிறுகதைப் போட்டி - கனிஷ்ட பிரிவு**

சி. தனஞ்சயன் (யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி), றெ. சிந்துஜா (யா/ இளவாலை கன்னியர்மடம் ம/வி)

**சிறுகதைப் போட்டி - சிரேஷ்ட பிரிவு**

இ. சோபிதா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ம. தர்சிகா, கு. அழகுவதனா (யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை).

**திறந்த போட்டி**

**சிறுகதை**

ஜோ. தேவமதி (மாசியப்பிட்டி சண்டிலிப்பாய்), இ. இராசயோகன் (சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை).

**கவிதை**

திருமதி எ. செல்வநாயகி (பண்டத்தரிப்பு), யோ. தேவமதி (மாசியப்பிட்டி சண்டிலிப்பாய்), கோ. மணிவண்ணன் (மானிப்பாய்).

**பாடலாக்கம்**

இ. இராசயோகன் (ஆனைக்கோட்டை), யோ. தேவமதி (மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்). (6)

## கண்டி மாவட்டத்துக்கான

# அமைச்சுப் பதவிகள் வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் மற்றும் மறுவாக்குப்பதிவு தொடர்பாக ஆட்சித் தலைமைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்ட பின்பே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படுவது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விடயம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தின் நாவலப் பிட்டி தேர்தல் தொகுதியில் வாக்குச் சாவடிகளில் முறைகேடுகள் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டு பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேர்தல்கள் ஆணையாளாரால் நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் 37 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு சூன்யமாக்கப்பட்டு கடந்த 20 ஆம் திகதி மறுவாக்களிப்பு நடத்தப்பட்டது.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சார்ந்த வேட்பாளர்கள் பலர் கட்சித் தலைமையிடம் முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

விருப்பு வாக்குகளை அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்பட்ட போட்டி காரணமாகவே ஒரே கட்சிக்குள் மோதல்கள் ஏற்பட்டதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக கட்சித் தலைமை விசாரணைகளை நடத்தி உண்மைகளை கண்டறிந்த பின்னரே அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் எஸ்.பி. திசாநாயக்க ஆகியோர் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (6)

# இருவேறு விபத்துச் சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்

(கொழும்பு)

நாட்டின் இருவேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

தம்புள்ளை கொழும்பு வீதியின் இப்பாகமுவ சந்திக்கருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வீதியை கடக்க முற்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை கல் ஓயாவிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டு மற்றுமொருவர் உயிரிழந்துள்ளார். கந்தளாய் ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிடுகிறது.

இராணுவ வீரர் ஒருவரே ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் பொல்கொல்ல மற்றும் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (6)


பாராட்டி வாழ்த்துகிறோம்

23.04.2010 அன்று
கௌரவ ஜனாதிபதி முன்
நிலையில்
பாரம்பரிய
கைத்தொழில்துறை
சிறுகைத்
தொழில் முயற்சி
அபிவிருத்தி
அமைச்சராகப்
பதவிப் பிரமானம்
செய்து கொண்ட



K.N. டக்ளஸ் தேவானந்தா

(செயலாளர் நாயகம் ஈழமக்கள் ஜனநாயக் கட்சி)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அமைச்சர் அவர்கள் மேலும் பல பதவிகள் பெற்று அரசியல் பணி தொடர வாழ்த்துகிறோம்.

ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி

பொறுப்பாளரும், தோழர்களும்
அரசியல் காரியாலயம்,
கோப்பாய்ச் சந்தி, கோப்பாய்.

(1253)

# கும்ப்ளே சுழல் சூறாவளியில் டெக்கான் சுருண்டது

# மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் மூன்றாமிடம்

## இறுதிப் போட்டியில் இன்று மும்பை-சென்னை மோதல்

(மும்பை)

சகல துறையிலும் ஜொலித்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியை வீழ்த்தி ஐ.பி.எல். தொடரில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் அரையிறுதி ஆட்டங்கள் நிறைவடைந்த நிலையில் இறுதிப்போட்டிக்கு மும்பை இந்தியன்ஸ் அணியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் முன்னேறியது.

அரையிறுதிச் சுற்றில் தோல்விடைந்த பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ், டெக்கான் சார்ஜர்ஸ் அணிகள் மூன்றாமிடத்திற்கான போட்டியில் நேற்றுமோதின.

மும்பையில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 18.3 ஓவர்களில் 82 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அனீருத் சிங் 39 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 40 ஓட்டங்களையும் வேணுகோபால் ராவ் 27 பந்துகளில் (2 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 24 ஓட்டங்களையும் அதிக பட்சமாக எடுத்ததுடன் ஏனையோர் (4 வீரர்கள் பூச்சியம்) இரட்டை இலக்கை கூட எடுக்காமல் வெளியேறினர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் அனில் கும்ளே 3.3 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் பிரவீன் குமார், ஜக் கலிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், டோசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 83 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி டிராவிட்-பீற்றர்ஸன் ஜோடியின் அதிரடியில் 13.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 86 ஓட்டங்களைக்குவித்து 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ராகுல் டிராவிட் 30 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களையும் கெவின் பீற்றர்சன் 21 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸர்கள் உட்பட) 29 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்ததுடன் ஜக் கலிஸ் 19 ஓட்டங்களையும் எடுத்தார்.

பந்துவீச்சில் ரோகித் சர்மா ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் மூன்றாவது இடத்தைப் பிடித்து சம்பியன் லீக் தொடருக்கு தகுதி பெற்றது.

இதேவேளை மூன்றாவது ஐ.பி.எல். தொடரில் இறுதிப் போட்டி இன்று மும்பையில் நடைபெறுகிறது.

இப் போட்டியில் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதுகின்றன.







முல்லைத்தீவு, மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்தவாரம் நடைபெற்ற வடமாகாண தமிழ் சிங்கள புத்தாண்டு கலாசார விளையாட்டு விழாவில் வடமாகாண அரச உத்தியோகத்தர்களுக்கும் பொது மக்களுக் கும் இடையிலான கயிறு இழுத்தல் போட்டியில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி போட்டியில் கலந்து கொண்ட ஒருவருக்கு கைலாகு கொடுப்பதையும் போட்டியில் கலந்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

## அமெரிக்காவில் இருபது-20 தொடர்; இலங்கை-நியூசிலாந்து மோதல்

(வெலிங்டன்)

இலங்கை, நியூசிலாந்து அணிகள் மோதும் மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது -20 கிரிக்கெட் தொடர் அமெரிக்காவில் அடுத்த மாதம் நடக்கவுள்ளது.

அமெரிக்காவில் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் 20ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை நடக்கிறது.

இதற்கான அறிவிப்பை நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஜஸ்டின் வோன் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதுகுறித்து ஜஸ்டின் வோன் கூறியதாவது,

அமெரிக்காவில் கிரிக்கெட் விளையாட்டை அதிகரிக்கும் நோக்கத்துடன் அமெரிக்கா கிரிக்கெட் சபை மற்றும் நியூசிலாந்து கிரிக்கெட் சபை இணைந்து சர்வதேச கிரிக்கெட் தொடரை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இதன் முதற்கட்டமாக சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதும் 3 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை நடத்த முடிவு செய்துள்ளோம்.

இப் போட்டிகள் அனைத்தும் புளோரிடாவில் அடுத்தமாதம் 20,22 மற்றும் 23ஆம் திகதிகளில் நடக்கவுள்ளது. இதன்மூலம் அமெரிக்காவில் கிரிக்கெட் விளையாட்டு விரைவில் அசுர வளர்ச்சி அடையும் இவ்வாறு ஜஸ்டின்வோன் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். விருது வழங்கும் விழா மும்பையில் பிரமாண்டமாக நடந்தது

## சிறந்த துடுப்பாட்ட வீரராக சச்சின் தேர்வு



(மும்பை)

ஐ.பி.எல். விருது வழங்கும் விழா மும்பையில் உள்ள கிராண்ட்ஹயாட் ஹோட்டலில் நேற்று முன்தினம் இரவு மிகவும் பிரமாண்டமாக நடந்தது. மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் சச்சின் டெண்டுல்கர் சிறந்த துடுப்பாட்ட வீரராகத்தேர்வு பெற்றார். அவர் 14 போட்டிகளில் 570 ஓட்டங்கள் எடுத்துள்ளர்.

கலிஸ், உத்தப்பா, சுரேஸ் ரெய்னா, முரளி விஜய் ஆகியோரும் இதற்கான பட்டியலில் இருந்தனர். டெண்டுல்கர் விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்காததால் அவர் சார்பில் அந்த அணியின் உரிமையாளர் நீட்டா அம்பானி இந்த விருதை பெற்றுக்கொண்டார்.

சிறந்த பந்துவீச்சாளர்களுக்கான பரிந்துரையில் ஓஜா (டெக்கான்), அஷ்வின் (சென்னை), சகீர்கான் (மும்பை), வினேய்குமார் (பெங்களூர்), ஹரிஸ் (டெக்கான்), ஹர்ப்பஜன் சிங் (மும்பை) ஆகியோர் இருந்தனர்.

இதில் ஓஜா சிறந்த பந்துவீச்சாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 15 ஆட்டத்தில் 21 விக்கெட்டை கைப்பற்றியிருந்தார்.

மற்ற விருதுகளை பெற்ற வீரர்கள் வருமாறு,

சிறந்த புதுமுகம் - பொல்லார்ட் (மும்பை இந்தியன்ஸ்),

பரபரப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தியவர் - ஹர்ப்பஜன் சிங் (மும்பை இந்தியன்ஸ்),

தொடர்ந்து சிறப்பாக ஆடியவர் - கலிஸ் (பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்),

சிறந்த களத்தடுப்பாளர் - டி வில்லியர்ஸ் (டில்லி டேர் டேவில்ஸ்),

சிறந்த மைதானம் - பெங்களூர் சின்னச்சாமி மைதானம்,

சிறந்த அரங்கு அனுபவம் - மும்பை பட்டேல் அரங்கு,

திருப்பு முனையை ஏற்படுத்தியதற்கான விருது மக்குலம் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 2008), கும்ளே (பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ்-2009) கிடைத்தது.

ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி, கவாஸ்கர், லாரா, ஸ்ரீநாத், சைமன் டவ்பெல், ஹர்சா போகலே ஆகியோர் அடங்கிய குழு வீரர்களை தேர்வு செய்தது.











2007, 2009இல் நடைபெற்ற இலங்கை துடுப்பாட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது. இவ் நிகழ்வில் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தலைவர் என்.மதிவதனன், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க ஆகியோர் உரையாற்றுவதையும் பரீட்சையில் சித்தியடைந்த மத்தியஸ்தர் ஒருவருக்கு பிரிகேடியர் பிராங்லி ரொட்ரிக்கோ சான்றிதழ் வழங்குவதையும் யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் நினைவுச் சின்னமாக இலங்கை துடுப் பாட்ட விரிவுரையாளரும் சிரேஷ்ட மத்தியஸ்தர் ரி.பிரான்சிஸ் இடம் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க கேடயம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## யாழ்ப்பாணக் கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் இடம்பெறும். இதில் தவறாது சகல அதிபர்களையும் சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (நு)

## திஸ்ஸ...

வீரதுங்க கூறியுள்ளார். எதிர்வரும் 30 ஆம் திகதி ஹெகலிய ரம்புக்வெல, எஸ்.பி.திஸநாயக்க, சரத் அமுனுகம ஆகியோரும் அமைச்சர்களாகப் பதவி ஏற்கவுள்ளனர். இதன் பின்னர் அமைச்சரவை எண்ணிக்கை 43 ஆக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் ஜனாதிபதியும் 4 அமைச்சுகளைத் தனது பொறுப்பில் வைத்துள்ளார். (ந-5)

புதியபிரிவுகள் ஆரம்பம்
Advanced Dip. in Video mixing
Auto CAD
ICT(O/L) (தரம் 10 & 11)
ICT(A/L) (தரம் 12 & 13)
GIT(A/L) (தரம் 12 & 13)
Ms Office2007 & DTP
Internet & Email
BIT, AAT, ACBF
Accounting Package
Computer Hardware
Programming Languages
Kids Programme (தரம் 01→09வரை)
Group Classes
Morph, Cool3d, Project, Premiere, Soundfroge, Combustion, Power director, Vcd and convertor, Editing using Photoshop


முழுமையான கணணிக் கல்விக்கு இன்றே எம்முடன் இணையுங்கள்...
CB Computer Academy Station Road Kondavil. T.P: 021-3217903
(1257)

# ஜனாதிபதியின் தந்திரோபாயமே புலிகளை முற்றாகத் தோற்கடித்தது

## கோத்தபாய ராஜபக்ஷ வீராப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் முன்னணி அரசுக்கு இருந்த அரசியல் விருப்பும் அதன் தந்திரோபாயமுமே தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இருந்த உறுதியான தீர்மானமே அவ் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதற்கான முதன்மையான காரணம் என இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுடனான போரின் இறுதிக் காலங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இருந்த அரசியல் விருப்பமும் அவர் மேற்கொண்ட தந்திரோபய நகர்வுகளுமே படையினர் விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காணச் செய்தது.

இந் நிலையில் போரின் இறுதிக் காலங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்ட பல தந்திரோபாய நகர்வுகளின் கூட்டு நடவடிக்கையே படையினரை விடுதலைப்புலிகளை எதிர்த்துப் போரிட்டு வெற்றி காணச் செய்தது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

## மனோ கணேசனுக்கு...

பகக் கட்சிகளுக்கும் தேசிய பட்டியலில் குறைந்த பட்சம் ஒரு உறுப்புரிமை இருக்கின்றது என்ற அடிப்படையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி உருவாக்கப்பட்டது.

மேலதிகமான தேசிய பட்டியல் நியமனங்கள் அவ்வவ் கட்சிகளின் வெற்றி பெற்றுள்ள வேட்பாளர்களின் தொகைக்கேற்ப தீர்மானிக்கப்பட வேண்டும்.

எமது தலைவர் கண்டி மாவட்ட மக்களின் நீண்ட காலக் குறையைத் தீர்ப்பதற்காக ஒரு மக்கள் தலைவர் என்ற அடிப்படையில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டார்.

அதேவேளையில் தேசிய பட்டியலிலே எங்களது கட்சிக்குரிய இடம் உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டது என்பதுவும் தேசியப் பட்டியல் நியமனம் என்பதுவும் இரண்டும் வெவ்வேறு விடயங்கள்.

கண்டியில் எமது தலைவர் வெற்றி பெற்றிருந்தாலும் கூட தேசியப் பட்டியல் உறுப்புரிமை எங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும். பல்லாண்டுகளாகப் பாரிய செயற்பாடுகளை எதிரணியிலே முன்னெடுத்த கட்சி என்ற முறையிலே எங்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணியிலேயே முழுமையான உரிமையிருக்கின்றது என்றார். (ந-5)

## புலிகளின் இரணைமடு...

வுள்ளதாக அரச அதிபர் அறிவித்த போதும் இப் பகுதியில் மக்கள் குடியமர்த்தப்படாமைக்கு இதுவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இவ்வாறான தகவல்கள் வெளியாகியுள்ள போதும் குறிப்பாக வடக்கில் பலாலி விமான நிலையம் உட்பட வன்னியில் விமான ஓடுதளம் மற்றும் விமானப் படைத் தளம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் இந்தியாவுக்கு வழங்கியிருப்பதன் அடிப்படையிலேயே இந்திய வான்படை அதிகாரிகள் மற்றும் வான்படை நிர்மாணத்துறைப் பிரிவினர் நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறான தகவல்கள் வெளியாகியுள்ள போதும் இலங்கை - இந்திய தரப்புக்கள் உத்தியோகபூர்வமாக எந்தத் தகவல்களையும் வெளியிடவில்லை. (ந-5)

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
கண்டிய நடனம்
இலவச சான்றிதழ் கற்கைநெறி
ஆரம்பம்: 01.05.2010 சனிக்கிழமை மு.ப. 10.00 மணி
கண்டிய நடன இலவச கற்கை நெறியில் பயில விரும்பும் ஆர்வமுடையோர் 30.04.2010 வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தங்களது பெயர் விபரங்களை பின்வரும் இடங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.
◈ கலைத்தூது அழகியல் கல்லூரி
128, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 9419
◈ திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2393
(சி-145)

## பேச்சுக்கு வருமாறு அரசு அழைத்தால்...

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வினை எதிர்பார்ப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற முதல் அமர்வில் கூறிய கருத்தினை அரசாங்கம் வரவேற்றிருந்தது.

இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து கிடைத்த நல்ல சமிக்ஞை என் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்திருந்ததுடன், சார்க் மாநாட்டின் பின்னர் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களுக்குள்ள இரண்டு முக்கிய பிரச்சினை குறித்து அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணைந்து செயற்படுவோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த வாரம் கூடி முடிபெடுத்தோம்.

இதன் பிரகாரம் தமிழ் மக்களின் உடனடித் தேவையாகவுள்ள இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் அரசியல் கைதிகள் மற்றும் போராளிகளுக்கான பொது மன்னிப்பு, காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பது மற்றும் அபிவிருத்தி என்பனவாகும்.

அடுத்த கட்டமாக இணைந்த வடக்குக் கிழக்கில் அரசியல் அதிகாரத் தீர்வு. இவை இரண்டு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராகவுள்ளது.

மேற்படி இரண்டு விடயங்களிலும் அரசு அக்கறை செலுத்தி எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தினால் இணைந்து செயற்பட நாம் தயாராகவுள்ளோம் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். (ந-5)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய
பத்திரிகை | வானொலி | தொலைக்காட்சி | இணையம்
ஊடகக் கல்வி
IT ORIENTED JOURNALISM COURSE

Get Set for careers
ஊடகத்துறை நுட்பங்களில் சிறந்த தேர்ச்சி பெறுவதற்கான உலகத்தரம் வாய்ந்த செயன்முறைக் கற்கைநெறி
• விரிவான கையேடுகள் • நூலக வசதி
• இணைய - கணினி ஆய்வுகூடம்
• AUDIO – VIDEO LAB • BASIC PHOTOGRAPHY
• ஆங்கிலம், கணினி அறிவில் கூடுதல் கவனம்
• ஊடகத்துறையுடன் தொடர்புடைய மென்பொருள் பயிற்சி
சுய விபரங்களுடன், நீங்கள் இந்தக் கற்கைநெறியைத் தொடர விரும்பும் காரணத்தையும் விளக்கி, 30-04-2010 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.
• பயிற்சிக் காலத்தில் பகுதி நேர வேலைவாய்ப்பு.
• சிறப்புத் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு பயிற்சி நிறைவில் நிரந்தரத் தொழில்.
சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் (IFJ) அங்கீகாரம் பெற்ற பயிற்சியாளரினால் நடத்தப்படும்
கற்கைநெறிக் காலம்: 3 மாதங்கள்
SIKARAM MEDIA HOUSE
Centre for Media Studies and Research
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம் - யாழ்ப்பாணம்
Tel: 021-3008060 Email:sikaramthodu@gmail.com
(சி-156)

## ஒரு மாத காலத்திற்குள்...

அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது, தேர்தலில் வரலாற்று ரீதியான வெற்றியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புப்பெற்றுக் கொண்டுள்ளது.

இந் நிலையில் 144 ஆசனங்கள் என்பது மூன்றில் இரண்டு பெரும்பான்மைபப் பலத்துக் குச் சற்றுக் குறைவாகவிருந்தா லும் இன்னும் ஒரு மாத காலத்தில் அதில் மூன்று இரண்டு பெரும்பான்மைபலமாக மாற்றமடையும்.

அதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. நாடாளுமன்றத்தில் முதலாவது அமர்விலேயே சில எதிர்க்கட்சி எம்.பிக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முதலாவது நாடாளுமன்ற அமர்வின் போது ஆளும் கட்சியுடன் எதிர்க் கட்சி ஒத்துழைப்புடன் செயற்பட்டது. அதனையிட்டு எதிர்க்கட்சிக்கு நன்றி தெரிவிப்பதுடன் மகிழ்ச்சியடைகின்றோம். தொடர்ந்து இவ்வாறு ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ந-5)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses...
*MS Office *Accounting*Graphics 3D
*Printing & Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,ICT,GIT,Kids Programs
International Courses...
Computer Engineering,CIMA,IELTS / Toefl
Cisco-CCNA, ICDL-AutoCAD, BCS,
Sun Java programmer, Red Hat Engineer
Degree Course-BIT-University of Colombo
Free e-citizen,Hardware Technology-DHT,
INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE-ICDL
Diploma in English,DTP(Printing),Typing,Internet&Email
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு
Closing Date 28.04.2010
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org
Call 772395895
(சி-158)

## ஐ.தே.கட்சியின்...

சனுடன் நேற்று முன்தினம் இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாற்றும்போதே இதனைக் கூறியுள்ளார். எவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றாலும் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ள சஜித் பிரேமதாச, ஏற்பட்டுள்ள அநீதிக்கு நீதியான தீர்வை பெற்றுக் கொடுக்கக் கூடிய தலையீடுகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ந-5)

CIMA UK


CIMA நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையம் (Listed College), பரீட்சை நிலையம்
MCS இல் CIMA அனைத்து கற்கை பிரிவுகளும்.
எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய மாதிரிப்பரீட்சைகள்
Operational Level -28/04/2010 (Poya Day) 9AM
* ICDL - International Computer Driving License
* DIE - Diploma in English (Duration 06 Months)
} Free
MCS Supported By UNDP/JRRP
பதிவுகளுக்கு27-04-2010 முன் நேரில்
Call 772395895 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(சி-157)

## ஊடகத்...

குறிப்பிடத்தக்கது. இதேவேளை முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் ஊடகத்துறைபிரதிஅமைச்சராகமேர்வின்சில்வாபதவியேற்றுக் கொண்டமைகுறிப்பிடத்தக்கது. (ந-5)

" வெளி மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க "
கணக்கீடு D.Sam
A/L இரவுநேர வகுப்பு
ஏப்பிரல்- 27 இரவு 07 மணி
DMI JAFFNA
"நிபந்தனைகள் அற்ற அனுமதிகள்"

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.